# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, கார்த்திகை 11௨ (26-11-72) ஞாயிறு ஷவ்வால் 19 | புத்தகம் 25 இதழ் 51


## 'கோமாளிச் சூரியர்'



பழைய தமிழ் மன்னர்களின் காலத்தில் அரண்மனைக் கோமாளி என்று ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததாக கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்றைய அரசியலிலும் ஒரு கோமாளி இருக்கவே இருக்கிறார் என்று நான் சொன்னால் ஒப்புக்கொள்வீர்கள். அவர்தான் ''குமாரசூரியர்!'' புதிய அரண்மனைக் கோமாளி!!

—மட்டுநகர் கூட்டத்தில் வவுனியா பா. உ. திரு. செல்லத்தம்பு

## சட்டமறுப்பு இயக்கம்

# சனவரியில் தொடங்கலாம்!

## காங்கேசன்துறை இடைத் தேர்தல் பின்போடப்பட்டதன் எதிரொலி!

காங்கேசன்துறை இடைத்தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டதன் எதிரொலியாக, தமிழர் கூட்டணியின் உத்தேச சாத்வீக சட்டமறுப்பு இயக்கத்தை 1973 சனவரியில் ஆரம்பிக்கவேண்டுமென கூட்டணி நடவடிக்கைக் குழுவிலுள்ள இளந்தலைவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

1973ம் ஆண்டு முழுவதற்கும் நீடிக்கக் கூடிய முறையில் இந்தப்போராட்டம் திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் கருத்துக்கொண்டுள்ளனர்.

தமிழ்தேசிய இனத்தின் விடுதலைப்போராட்டத்தின் அடுத்த கூட்டம் குறித்து 25ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் கூடும் நடவடிக்கைக்குழு முடிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன்துறை இடைத் தேர்தல் அரசாங்கத்தினால் இடைநிறுத்தி ஒத்திவைக்கப்பட்ட பின்னர் முதன் முறையாக இம்மாதம் 25ம் திகதி தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு யாழ்ப்பாணத்தில் அதன் தலைமைக் காரியாலயத்தில் கூடுகிறது. இக்கூட்டத்தில் தமிழர் கூட்டணியின் அடுத்த நடவடிக்கை பற்றி ஆராயப்படவுள்ளது.

தமிழர் கூட்டணி ஏற்கெனவே திட்டமிட்டுள்ளபடி சாத்வீக சட்டமறுப்பு போராட்டத்தை மேலும் காலதாமதமின்றி எதிர்வரும் 1973 சனவரியிலேயே ஆரம்பிக்க வேண்டுமெனவும், 1973ம் ஆண்டு முழுவதற்கும் திட்டம் வகுத்து போராட்டத்தில் இறங்க வேண்டுமென்றும் கூட்டணியிலுள்ள தீவிரவாதிகளான இளைய தலைவர்கள் கருதுகின்றனர்.

1973 சனவரியிலிருந்து டிசம்பர்வரை — ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக போராட்டம் நடைபெற வேண்டும் என்றும் அதற்கேற்ற முறையில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டு

(4ம் பக்கம் பார்க்க)

## 'தமிழ்விழா' என்று போடாதே!

### காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் ஊழியருக்குக் கட்டளை!

### ஆட்சியாளரின் வெறிப் போக்கு!

'தமிழ்' என்ற சொல்லைக் கேட்டாலே சிங்கள ஆட்சியாளருக்கு இப்போது அருவருக்கிறதாம் அதனால் தானோ என்னவோ, இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தமிழ் இலக்கிய மன்றத்தினர் ஆண்டு தோறும் நடத்திவந்த 'தமிழ்' விழாவை 'தமிழ் விழா'வாக இம்முறை கொண்டாடக்கூடாதென அரசினர் கடைசி நேரத்தில் தடைவிதித்துவிட்டதாகத் தெரிகிறது. இதனால், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் இலக்கிய மன்றத்தினர் கடந்த சனிக்கிழமை (18.11.72)ல் எடுக்கவிருந்த தமிழ் விழா கடைசி நேரத்தில் ஆண்டு விழா எனப் பெயர்மாற்றம் பெற்றதாகவும் அறியப்படுகிறது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் இலக்கிய மன்றத்தினர் கடந்த ஐந்து ஆண்டுகளாக 'தமிழ் விழா' என்ற பெயரிலேயே கொண்டாடி வந்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற மேற்படி மன்றத்தினரின் தமிழ் விழாவில் ஈழவேந்தன், காசி ஆனந்தன் போன்ற பல விடுதலை வீரர்கள் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து காசி ஆனந்தனை மேற்படி விழாவில் பேச அழைத்ததற்காக மேற்படி இலக்கிய மன்றத்தினர் மீது அமைச்சு அதிகாரிகளால் விசாரணைகள் நடைபெற்றதும் நடந்து முடிந்த விஷயம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இடைத்தேர்தல் ஒத்திவைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஹர்த்தால்!

காங்கேசன்துறை இடைத்தேர்தலை அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஒத்திவைத்துள்ள அரசின் சனநாயக விரோதப் போக்குக்கு எதிராக இம் மாதம் 29ம் திகதி காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் போன்றவற்றை நடத்த ஆலோசித்து வருகின்றனர்.

25-11-72ல் யாழ்ப்பாணத்தில் கூடும் தமிழர் கூட்டணியின் செயற்குழு இது பற்றி ஆலோசித்து இதற்கான இறுதி அனுமதியை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சூரியரின் பொய்ப் பிரசாரம் தூள் தூளாக உடைந்தது!

• காசி ஆனந்தன்

வண்ணை ஆனந்தன்

சிறையில் இன்று

163-வது நாள்

## தமிழ்ப் பகுதிக்குச் சுருக்கெழுத்தாளர் சிங்களவர் 31—தமிழர் ஆக 12!

## தட்டெழுத்தாளர் சிங்களவர் 15—தமிழர் 9!

### ஐந்து நீதிமன்றங்களில் மட்டுமே எல்லாம் தமிழ்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லா நீதிமன்றங்களிலும் தமிழ் அரசோச்சுவதாக அமைச்சர் குமாரசூரியரும் ஆளுங்கட்சி எடுபிடிகளும் நாட்டில் நடத்தி வந்த பிரச்சாரம் முழுப்பொய் என்பதை தேசியப் பேரவையில் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் கேள்வியொன்றுக்கு நீதி அமைச்சர் அளித்த பதில் திட்டவட்டமாக நிருபித்துவிட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்களச் சுருக்கெழுத்தாளர் 31 பேரையும் தமிழ் சுருக்கெழுத்தாளர் பன்னிரண்டு பேரையும், சிங்களத் தட்டெழுத்தாளர் 15 பேரையும் தமிழ்த்தட்டெழுத்தாளர் 9 பேரையும் அரசு அனுப்பிவைத்திருக்கிறது என்ற உண்மையும் இப்போது அம்பலமாகிவிட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சகல நடவடிக்கைகளையும் தமிழில் நடத்தும் நீதிமன்றங்கள் ஆக ஐந்தே ஐந்து. அவை முல்லைத்தீவு, சாவகச்சேரி, ஏருவூர், அக்கரைப்பற்று கிராம நீதிமன்றங்களும், கல்முனை மாவட்ட நீதிமன்றமுமே என்ற உண்மையும் துலாம்பாரமாகக்கப்பட்டு விட்டது.

பண்டிதருக்கு நீதியமைச்சர் அளித்த பதிலிலிருந்து தெரியவந்த உண்மைகள் வருமாறு:—

ஏருவூர், பட்டிருப்பு, அக்கரைப்பற்று, நிலாவெளி, மூதூர் கிராம நீதிமன்றங்கள் ஒவ்வொன்றுக்கும் சிங்கள சுருக்கெழுத்தாளர் ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழுக்கு இல்லை.

வடக்கு மாகாணம்

வட மாகாணத்தில் தமிழ் சுருக்கெழுத்தாளர் இல்லாத நீதிமன்றங்கள் வருமாறு: சாவகச்சேரி, ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள், மன்னார், வவுனி

(4-ம் பக்கம் பார்க்க)

## பாலா தம்போ! பேசாதே வம்பு!!

### இளைஞர்களின் எதிர்ப்பு!

திருகோணமலையில் தமிழர் தந்தை செல்வாவை தாக்கிப்பேசிய 'பாலா தம்போ' என்பவர் விடுதலை உணர்ச்சிமிக்க தமிழ் இளைஞர்களிடம் வகையாக சிக்கிக் கொண்டு தவியாய்த் தவித்தார்!

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தந்தை செல்வாவையும் தமிழர் கூட்டணியையும் 'தம்போ' தாக்கிப்பேசிய போது—பலவாலிபர்கள் மேடையை நோக்கிப்பாய்ந்து 'தம்போ'விடம் சரமாரியான கேள்விகளைக் கேட்டுத் திணற அடித்தனர்.

'தமிழ் தலைவர்களையோ, தமிழர் கூட்டணியினரையோ அவமதிப்பவர்களையோ அவதூறு கூறுபவர்களையோ தமிழ் இளைஞர்களாகிய நாம் இருந்சிற்றும் மதிக்கமாட்டோம்; பாலா தம்போ, பேசாதே வம்பு' என்று அவர்கள் கோஷமிட்டனர். இதனால் திரு. 'தம்போ'வினால் தொடர்ந்து பேச முடியாமல் போய் விட்டது. கூட்டம் அமளியில் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறுபான்மை" இனத்தின் விடுதலைப்போரை

# சீன ஆயுதம் கொண்டு அடக்கிவிட முடியாது"

## தேசீய அரசப் பேரவையில் உடுவில் பா. உ. அறிவுரை!

"சீன ஆயுதங்களைக் கொண்டு இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்கிளர்ச்சியை முறியடித்துவிட முடியாது. துப்பாக்கிகளால் துடித்தெழும் மக்களை அடக்கிவிட முடியாது."

—இவ்வாறு தேசிய பேரவையில் வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது பேசிய உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் ஆட்சியாளரைப்பார்த்து அறைகூவல் விடுத்தார்.

'நிதியமைச்சரினதும், அரசமைப்பு விவகார தொழில் அமைச்சரினதும் கையில் அரசாங்கத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைத்தால் இந்த நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்து விடும் அரசியல் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்றெல்லாம் நாம் கனவு கண்டதுண்டு.

அரசமைப்பு அமைச்சர் புதிய அரசியற் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இது இந்த நாட்டை இரண்டு பிரிவாக ஆக்குவதற்கு வழி வகுத்துள்ளது. இதே போன்று நிதி அமைச்சர் சமர்ப்பித்த வரவு — செலவுத் திட்டமும் இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்க வழி வகுத்துள்ளது.

'இந்த வரவு — செலவுத் திட்டம் பின் வாங்கில் இருப்பவர்களின் திருப்திக்கு இவைதான் கொண்டுவரப்பட்டது என்பது எமக்கு நன்றாகத் தெரியும்.

'அரசியலுக்கும் — பொருளாதாரத்துக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தில் அரசியலுக்குத்தான் வெற்றி ஏற்பட்டுள்ளது. 10ஆம் திகதி இரவு சிராவஸ்தியில் 'வெடி' கொழுத்தியதிலிருந்தே அரசியலுக்குத்தான் வெற்றி கிட்டியுள்ளது என்பதை நாம் நன்குணர்ந்துள்ளோம்.

'பின் வாங்கில் இருப்பவர்கள் தமது தொகுதிக்கு அச்சமில்லாமல் தற்காலிகமாகப் போவதற்கு இந்த வரவு — செலவுத் திட்டம் உதவி அளிக்கலாம். ஆனால் அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கப்போகின்றது என்பதில் சந்தேகம் இல்லை.


'இந்த வரவு — செலவுத் திட்ட மூலம் நாட்டை அபிவிருத்தி செய்யவோ அன்றி, பிரதமரின் ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் செய்யவோ முடியாது.

'ஆளும் கட்சியினர் தேர்தலின் போது அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்போம் என்று மக்களுக்கு உறுதியளித்தார்கள். கடந்த உபதேர்தலில் இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

'பிரதமருக்கு முஸ்லிம்கள் மருதானையில் அளித்த வரவேற்பில் மக்காவிற்கும் செல்லப் பணம் ஒதுக்குவதாகப் பிரதமர் வாக்குறுதியளித்தார். பின்னர் புத்தளத்தில் உப தேர்தல் நடந்தது. அரசாங்க வேட்பாளர் தோல்வியடைந்தார். மக்காவுக்குச் செலவாணி வழங்கும் உறுதியும் அத்துடன் மறைந்து விட்டது.

"இந்த அரசாங்கத்தினர் தேர்தல் காலத்தில் பொருள்களின் விலைகளைக் குறிப்பிட்டு அவற்றின் விலையை உயர்த்தமாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்று நிலை என்ன? இடாம்பீகப் பொருள்களுக்குத்தான் விலை அதிகரிக்கப் போகின்றோம் என்று நிதி அமைச்சர் சொன்னார்.

"பருத்தி உடை இடாம்பீகப் பொருளா? ஆயுர்வேத மருந்துகள் இடாம்பீகப் பொருளா? என்று நான் கேட்கிறேன். கைத்தறி உடைகளின் விலைகள் உயரப்போகின்றன. இது வறிய மனிதர்களின் உடை அல்லவா?



"அத்தியாவசியப் பொருள்கள் சரியான முறையில் விநியோகப்படாததினால் தான் பொருள்களின் விலைகள் ஏறி உள்ளன என்றும் தெஹியோவிற்ற எம். பி. கூறி உள்ளார். கூட்டுறவு சங்கங்களில் அதிகமாக ஸ்ரீ. ல. சு. கட்சியினரின் ஆட்களே இருக்கிறார்கள்.

தபால் அமைச்சரைக் கேட்டால் தெரியும். யாழ்ப்பாணத்தில் உள்ள சங்கக் கடைகளில் அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ. ல. சு. கட்சி ஆட்கள் எத்தனை பேர் கடமையாற்றுகின்றனர் என்பதை அவர் நன்கு அறிவார்.

"120 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இதில் எத்தனை தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதென்று தபால் அமைச்சர் சொல்வாரா?

120 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கியதாகச் சொன்னீர்கள். அதே நேரத்தில் எத்தனை ஆயிரம் பேரை வேலையில் இருந்து நீக்கினீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

நிதி அமைச்சர்: [illegible] போ வரையில்தான் [illegible] நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தர்மலிங்கம்:- "இல்லவேயில்லை. 55 வயது கட்டாய ஓய்வினால் எத்தனை ஆயிரம் பேர் வேலை இழந்தனர்? விவசாயப்படை முற்றாக கலைக்கப்பட்டது. இதில் வேலை இழந்தோர் எத்தனை ஆயிரம்பேர்?

"ஏகாதிபத்திய நாடுகளிடம் இருந்து கடன்பெறக் கூடாது என்று நிதி அமைச்சர் சொன்னார். இந்தத் தத்துவம் உலக வங்கி கடன் வழங்க மறுத்ததன் பின்னர் தான் தோன்றியதோ தெரியவில்லை.

"அமைச்சர் தானாகவே இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்திருந்தால் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது.

மஜீத்:- யார் தயாரித்தது?

தர்மலிங்கம்:- பின்வாங்கிலிருப்பவர்கள்தான் தயாரித்தார்கள். 29½ கோடி ரூபா படைகளுக்காகச் செலவிடப்பட உள்ளது. இதுஏன் எந்த அயல்நாட்டிலிருந்து துவக்குகள் இறக்குமதி செய்துள்ளீர்கள். இது எதற்காக?

"ஒற்றையாட்சி பேசுபவர்கள் ஒற்றுமையைக் குலைக்கிறார்கள். அவர்களுக் கெதிராகப் பாவிக்கத்தான் இந்தத் துப்பாக்கிகள் என்று உதவி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் இந்தச் சபையிலும், திருகோணமலையிலும் பேசினார்.

"துப்பாக்கிகளினால் எதையும் செய்துவிட முடியாது. சமாதானத்தினால் தான் தீர்க்கமுடியும். சமாதானம் என்றால் சரணடை அல்ல.

தபால் அமைச்சர்:- சமாதானம் என்றால் கைக்குண்டு எறிவது!

தர்மலிங்கம்:- "அது உங்களுடைய ஆட்களின் [illegible]. மார்ட்டின் லூதர் கிங் சொன்ன சமாதானம் என்னவென்றால் சரணாகதியற்ற சமாதானமாகும். நாம் ஒற்றுமையைத் தான் விரும்புகிறோம். சமாதானத்தைப் பெற எமது மொழி உரிமையை சமயத்தை, அடிப்படை உரிமையை விற்றுப் பெறும் சமாதானத்தை நாம் விரும்பவில்லை.

"நாம் விரும்பும் சமாதானத்தை அடிப்படையாகக்கொண்டு ஆறு அம்சக் கோரிக்கைகள் பற்றிப் பிரதமருக்கு கடிதம் எழுதினோம். ஒரு பதிலும் இல்லை. ஆனால் சீனவிலிருந்து துப்பாக்கிகள்தான் வந்தன— ஒருவேளை அவை தான் எமது [illegible] பதி[illegible] இருக்குமோ [illegible] யாது.

"1958இல் பண்டார நாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டது. 1957இல் நாம் சத்தியாக்கிரக இயக்கம் நடத்தினோம். 1960இல் நாம் ஸ்ரீ. ல. சு. கட்சியுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினோம். 1960 மார்ச்சில் ஐ. தே. கட்சியை ஆட்சியில் ஏற்ற நாம் காரணமாக இருந்தோம். எமது நோக்கங்களை இலட்சியங்களை அடைவதற்காகவே நாம் ஒப்பந்தங்களை ஏற்படுத்தினோம்.

நிதி அமைச்சர்:- ஐ. தே. கட்சியுடன் ஒப்பந்தம் செய்தபோது நீங்கள் ஏற்படுத்திக்கொண்ட 4 அம்சக் கோரிக்கைகளைச் சொல்லுங்கள் பார்ப்போம்.

தர்மலிங்கம்:- உங்கள் பத்திரிகைக் காரியாலயத்துக்கு போனால் பழைய பேப்பர்களைப் புரட்டிப் பாருங்கள் அது தெரியும்.

தபால் அமைச்சர்:- ஏன் சமாளிக்கிறீர்கள். துணிவிருந்தால் சொல்லுங்களேன்.

தர்மலிங்கம்:- ஜனதின பத்திரிகைக் காரியாலயத்தில் போட்டோஸ்டாட் கொப்பி இருக்கிறது பார்க்கலாம்.

தமிழரசுக்கட்சி செய்து கொண்ட ஒப்பந்தங்கள் பற்றி சொன்னேன். இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் குறிப்பிட்ட காலத்தையும், குறிப்பிட்ட கொள்கைகளையும் கொண்டதாக இருந்தன. இந்த ஒப்பந்தங்களை, எமது அடிப்படைக் கோரிக்கைகளான ஆறு அம்சக் கோரிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமானது அல்ல.

எல்லாரும் சொல்கிறார்கள் தமிழரசுக்கட்சிக்கும் ஐ. தே. கட்சிக்கும் ஏதோ பிடிப்பு இருக்கிறது என்று. நமது 23 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் ஐ. தே. கட்சியுடன் ஆக 3½ வருடங்கள்தான் ஒற்றுமையாக இருந்தோம். அதுவும் ஒரு குறிக்கோளுடன்தான்.

"எமது ஆறு அம்சக் கோரிக்கைகள் என்ன? இந்தக் கோரிக்கைகள் ஒரு காலத்தில் சகல அரசியல் கட்சிகளாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றும். எமக்கு அடிப்படை உரிமை வேண்டும். மொழி உரிமைவேண்டும். சாதிப்பிரச்சினை முற்றாக ஒழிக்கப்படவேண்டும். நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும். இதை எந்தசோஷலிச அரசாங்கமும் மறுக்காது. இந்த அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படமாட்டாதா?

"ஆறு அம்சக் கோரிக்கைகளுக்குப் பதிலாக திருகோணமலைத் துறைமுகத்தில் துவக்குகள் கொண்டு வந்து இறக்குமதி செய்யப்பட்டன. இதுவா பதில் நடவடிக்கை. துவக்கினாலா இந்தப் பிரச்சினைகளைப் போக்கப் போகிறீர்கள்.

சிறுபான்மையினரின் உரிமைப்போரை துப்பாக்கிகளைக் காட்டி முறியடித்துவிடமுடியாது. ஆயுதபலத்தைக் காட்டி உரிமையை நசுக்கமுடியாது. பேச்சுவார்த்தைகளின் மூலமே சமரச இணக்கமான தீர்வுகளைக் காணமுடியும்.

நாமும் தமிழரின் உரிமைகளைப்பெறும் நோக்கத்துடன் எந்தக் கட்சியுடனும் யாருடனும் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறோம். பேயுடனோ பேயின் பாட்டியுடனோ கூட நாம் எமது உரிமைகளைப் பெறுவதற்காக ஒப்பந்தங்களைச்செய்து கொள்ள தயாராகவிருக்கிறோம்.

சிங்களவருக்கு சிங்களம் இருப்பது போல் தமிழருக்கு தமிழ் இருக்கவேண்டும் என்பது எமது ஒரு கோரிக்கையாகும். ஐ. நா. சபை அங்கீகரித்திருக்கும் அடிப்படை உரிமைகள் தமிழ் மக்களுக்கும் வழங்கப்படவேண்டும். அடுத்தது சோஷலிஸ அரசாங்கங்கள் எதுவுமே வழங்கத் தயாராக இருக்கும் சாதிவேற்றுமைகளுக்குசாவு மணி அடிக்க வேண்டும் என்றும் கேட்கிறோம். மறைந்த பிரதமர் திரு. பண்டாரநாயகவே மாவட்ட சபைகள், பிரதேச சபைகள் மூலம் வழங்கத் தயாராக இருந்தது போல் அரசாங்க இயந்திரம் பரவலாக்கப்பட வேண்டும் என்பது எமது அடுத்த கோரிக்கையாகும்.

ஆகவே இந்த நாட்டில் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதில் அரசாங்கத்திற்கு உண்மையான அக்கறை இருக்கும் பட்சத்தில் சீனு போன்ற நாடுகளில் இருந்து இராணுவ ஆயுதங்களை இறக்குமதி செய்வதை விடுத்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு எங்களுடன் பேசத் தயாராக இருக்க வேண்டும். நாம் தமிழரின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் நோக்கத்துடன் பிரதமருடன் பேசத் தயாராக இருக்கிறோம். இவ்விதம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் அக்கறை செலுத்தாவிட்டால் இந்நாடு இரண்டாக பிளவடைவதற்கு இந்த அரசாங்கமே அத்திவாரம் இடுகின்றது என்பதை நான் வருத்தத்துடன் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

நாட்டின் நன்மைக்காக நாம் எமது மொழி உரிமையையும் மத உரிமையையும் தியாகம் செய்ய அல்லது விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. தபால் மந்திரியும் வட்டுக்கோட்டை பிரதிநிதியும் இதற்குத் தயாராக இருக்கக்கூடும். ஆனால் நாம் இவ்விதத் தியாகங்களுக்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்.

### மலையகத் தமிழர் புறக்கணிப்பு

இந் நாட்டின் தேசிய வருமானத்தின் அறுபது வீதத்தை தேடித் தரும் மலை நாட்டுத் தமிழர்களை இந்த அரசாங்கம் புறக்கணித்து வருவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

தமிழர்கள் அரசாங்கத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சிக்கு மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவற்றை உற்பத்தி செய்து உழைப்பை புரிந்துள்ளார்கள். நாம் (தமிழர்) இவ்விதம் கஷ்டப்பட்டு உழைக்கா

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆயிரம் ஆண்டுகால அடிமை வாழ்வின் பின்

# தமிழகம் தலை நிமிர்ந்தது தி.மு.க. ஆட்சியின்கீழ்!

## தமிழினத்தின் காவல் ஆட்சி அழிக்கப்படுவதை தமிழுணர்ச்சியுள்ளவர்கள் அனுமதிக்கமாட்டார்கள்!"

## "தமிழ்மாநில" 16-ம் ஆண்டு நிறைவு விழாவில் சிலம்புச் செல்வரின் உணர்ச்சியுரை!

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை நாம் ஆதரிக்கிறோம் என்றால் — இந்த ஆட்சியை காப்பது நம்முடைய கடமை. இங்கே நடப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியல்ல-தமிழா சாதியின் ஆட்சி.

இதை அழிக்கும் நினைப்பை 4½ கோடி தமிழ் மக்களுக்கு விடுத்த அறைகூவலை மானமுள்ள தமிழன் ஏற்கத் தயாராகிவிட்டான்.

ஆகவே நாம் பாடுபட்டு படைத்த ஒரு ஆட்சி-பல்லாயிரம்வரை சிறைக்கு அனுப்பி கண்ட இந்த ஆட்சி-நாம் வாழ்வதற்கு வழிவகுத்த கட்சியில் இருந்து வெளியேறி படைத்த ஒரு ஆட்சி அழியப் போவதை நாம் பார்ப்போமானால் நம்மை விட ஏமாளிகள்—கோமாளிகள் வேறு யாருமே இருக்க முடியாது.

யார் ஆண்டாலும் தமிழகத்தை தமிழர் ஆளவேண்டும். தமிழர் ஆள்கிறார்கள்.

இந்த நாட்டை அரசியல் ரீதியாக எதிர்க்கட்டும். அங்கே போய் நான் குறுக்கே நிற்க விரும்பவில்லை. ஜனநாயக ரீதியாக எதிர்க்கட்டும் அங்கே நான் தடையாக இருக்க விரும்பவில்லை. பொருளாதார முற்போக்கு ரீதியாக எதிர்க்கட்டும்—அதற்கு நான் எதிரியாக இருக்க விரும்பவில்லை.

ஆனால் தமிழின் மீது பற்றுள்ள ஆட்சி— தமிழினத்தின் காவல் ஆட்சி என்பதற்காக, தமிழின் பகைவர்கள் இதை அழிக்க நினைத்தால்... அந்த முயற்சியை தடுக்க முனைவது தமிழரசுக் கழகத்தின் கடமையாகும் என்பதை இந்த நாளில் ஒரு சபதமாகவே அறிவிக்கிறேன்.

அது நடந்தால் என்னாகும்? அது கற்பனை செய்துபார்க்க வேண்டிய விஷயம். நாளைக்கு என்ன ஆகும் என்பதை நான் சர்ச்சை செய்யவில்லை. நேற்று என்ன ஆனது என்பதை நான் எடுத்துக் காட்டுகிறேன்.

பத்தாம் நூற்றாண்டிலே பதினோராம் நூற்றாண்டிலே ராஜராஜன் ஆட்சி தோன்றியது. ராஜராஜசோழன் அரசு ஒரு வல்லரசு. அது அழிந்தது: தானாக அல்ல— பாண்டியனுடைய பகையால் அது அழிந்தது. பாண்டியனும் தானாக அழிக்கவில்லை —இலங்கை அரசின் துணையோடும்— பிற அந்நியருடைய துணையைப் பெற்றும் அழித்தான்.

### பலவீனர்கள் துணை

பலவீனர்கள் எப்போதும் பிறர் துணையைத்தான் தேடுவார்கள். அதுபோல ராஜராஜ சோழன் ஆட்சியை எதிர்க்க நினைத்த பாண்டியன் பலவீனம் காரணமாக தமிழர் அல்லாதார் ஆட்சியின் அடைத் துணைபெற்று சோழ ஆட்சியை அழிக்க முடிந்தது.

அழித்ததைப் பற்றிக் கவலையில்லை. அவனாவது ஒரு வல்லரசாக இருந்தானா என்றால் அதற்கும் அவனுக்கு சக்தியில்லை. கையேந்திப் பெற்றவன் நிலைக்கமுடியவில்லை.

### அடிமை

பாண்டியனை சோழன் எதிர்த்து—சோழனைப் பாண்டியன் எதிர்த்து முடிவில் என்ன ஆனது? விஜய நகர சாம்ராஜ்யம்—ஆந்திர சாம்ராஜ்யம் வந்து அடிமைப் படுத்தி ஆண்டது.

ஆங்கிலேயன் அடிமைப் பட்டது ஆங்கிலேயர்களுக்குத்தான், அல்லது முகலாயர் அடிமைப்பட்டது முகலாயர்களுக்குத்தான்.

நாமோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—அடிமைப் பட்டு விட்டோம். பிறருக்கு எப்போது சோழப் பேரரசு வீழ்ந்ததோ, அன்றே தமிழா சாதி அடிமைப்பட ஆரம்பித்துவிட்டது.

### அந்நியர் ஆட்சி

விஜயநகர சாம்ராஜ்யமும், முகலாய சாம்ராஜ்யமும் அந்நியர் ஆட்சிகள் தான் என்பதில் ஐயப்பாடே கிடையாது.

முகலாயர் ஆட்சி வந்தது. அந்த ஆட்சியைஅழிக்க ஆங்கிலேயர் ஆட்சி வந்தது. இதைத்தான் பாரதி சொன்னான்— 'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல் வந்த மாமணியைத் தோற்போமோ'' என்று.

ஓராயிரம் ஆண்டுகால அடிமைத் தமிழன், மராட்டியனுக்கு அடிமைப்பட்டான். கன்னடருக்கு அடிமைப்பட்டான். முகலாயருக்கு அடிமைப்பட்டான். ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டான். புதுவை பிரஞ்சுக்காரனுக்கு அடிமைப் பட்டது.

இதற்கப்புறம்தான் சுதந்திரம் கிடைத்தது இந்த நாட்டுக்கு.

இதை ஏன் சொல்கிறேனென்றால், இந்த ஆட்சி கவிழ்ந்தால் என்ன ஆகும் என்பதற்கு நம் ஆட்சி கவிழ்ந்தபோது என்ன நடந்தது என்பதை நினைவிற் கொள்ள வேண்டிய நல்ல நாள் இந்த நாள்.

தமிழ் ஆட்சி, தமிழர் என்ற உயர்வுடைய ஆட்சியான ராஜராஜ சோழனின் சோழப் பேரரசு வீழ்ந்த பிறகு பாண்டியன் வீழ்ந்தான்.

### ஆங்கிலேயருக்கு பின்...

ஆங்கிலேயரை வெளியேற்றிய பின்னரும் இந்த மாநிலத்தில் தமிழ் ஆள முடிந்ததா? [illegible] ராக இருந்தோம்—அல்லது பிராமணர் அல்லாதாராக

பிராமணரல்லாதார் உணர்ச்சி பலப்பல சமூக நீதிகளுக்குப் பயன் பட்டது என்பதை ஒப்புக் கொள்ள நான் வெட்கப்படப் போவதில்லை. ஆனாலும் கூட தமிழ் உணர்ச்சிக்கு அதுவும் கேடாகத்தான் முடிந்தது என்பதை எடுத்துக் காட்ட நாம் தயங்கவும் கூடாது.

### சரித்திரம்

பொப்பிலி அரசர், பனகல் அரசர் முனுசாமி நாயுடு, வெங்கட கிருஷ்ணரெட்டி என்பதாக நான்கு முதல்வர்கள் இருந்தார்கள். ஒன்றின் பின் ஒன்றாக வந்த முதல்வர்கள் எல்லாம் நீதிக் கட்சியால் ஆந்திரரே வந்தது தான் சரித்திரம்.

'மதராஸ் மனதே' என்ற கூச்சல் வேறு எங்கோ எழுந்ததல்ல — பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் விளைவு.



இப்படி ஆயிரமாண்டுக் காலமாகத் தமிழன் என்ற இன உணர்ச்சி வளர முடியாமலே போனது.

தேச பக்தியின் விளைவால், பிரகாசத்தை தலையில் வைத்து நான் ஆடினேன்— ஆந்திர கேசரி பிரகாசம் வாழ்க என்றேன்.

நான் அவரை தேசத் தலைவராக எண்ணினேன். ஆனால் சோதனை வந்தபோது —அவர் ஆந்திர தலைவராக மாறி மதராஸ் மனதே என்று கொக்கரித்தார். அப்போதுதான், தேசத் தலைவர் என்று நினைத்தவர் ஆந்திர தலைவர் ஆகி விட்டாரே என்று நினைத்தேன். என்னை நானே உணர்ந்துகொண்டேன்.

ராஜாஜியை இந்த தோள்களிலே சுமந்தேன்; நாடு சுற்றி வலம் வந்தேன். அவரையும் தேச தலைவர் என்று எண்ணினேன். அவரோ மொழி வழி மாநிலம் அமைகிற போது அதை எதிர்த்து போராடினார்.

தமிழ் ஆட்சிமொழி — பயிற்சிமொழி என்கிற போது அதற்கு எதிர் பாசறை அமைத்து இன்று வரை போராடிக்கொண்டு இருக்கிறார்.

### தமிழரசு கழகம்

இப்படி தமிழன் யார் யாரை எல்லாமோ நம்பி — எது எதற்காகவெல்லாமோ நம்பி ஏமாந்த ஏமாற்றத்தின் விளைவு 1946 நவம்பர் 21-ல் தமிழரசுக் கழகத்தை

(7ம் பக்கம் பார்க்க)

## விடுதலை இயக்கத்தில் சிறைச்சாலையின் பங்கு!



''சிறைக்கு உடல் செல்வதால் மட்டும் நன்மை உண்டாகி விடமாட்டாது. சிறைக்கு செல்வதை நன்மை என்று இருதயம் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்—கையைக் குலுக்கினாலும் கட்டி அணைத்தாலும் அன்பு அதிகப்படுவது உண்மைதான். அப்படி அதிகப்படுவது இதயத்தால் அன்பு செய்தால் தான். மனதில் அன்பில்லாமல் கட்டியணைப்பது வெறும் சடங்கு மாத்திரமேயாகும். அது போல சிறைக்கு செல்வது தேசபக்தர்கள் செய்யும் காரியம் என்று எண்ணி மட்டும் சிறைக்கு செல்வதால் நன்மை உண்டாகாது.

அடிமை நாட்டில் சிறைக்கு வெளியே இருப்பதனால் உண்டாகும் மனவேதனையின் காரணமாகச் சிறைக்குச் சென்றால் தான் சிறைவாசம் மூலம் சுதந்திரத்தைப் பெறமுடியும். அநியாயத்தோடு ஒத்துழைப்பதையும், அடிமைத்தனத்தால் ஏற்படும் மானபங்கத்தையும் இனிமேல் [illegible] இல்லை [illegible] அந்த செல்லும் அநியாயத்துடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியம் இல்லை. அநியாயத்துடன் ஒத்துழைக்கும் பாபத்தை செய்வதைவிடச் சிறையில் ஏற்படும் துன்பங்களை அனுபவிப்பதே மேலானது என்று ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் எண்ணுவார்களானால், அது தான் உண்மையான தியாகம். அது பலனளிக்காமல் போகாது. அது பலனளிக்க வேண்டுமென்பதே ஆண்டவன் ஆணை. அதனால் உடனடியாக எந்த நன்மையும் தேசத்துக்கு உண்டாகா விட்டாலும் தேசத்தை அடிமையாக வைத்திருக்கும் அநியாயத்துடன் ஒத்துழைக்கும் பாபத்தைச் செய்யவில்லை— என்ற பரம திருப்தி ஒவ்வொருவருக்கும் உண்டாகும்.

அகிம்ஸா தத்துவத்திடமும் துன்பத்தை ஏற்பதன்மூலம் அநியாயத்தை நீக்கமுடியும் என்ற கொள்கையிடமும் நமக்கு நம்பிக்கை இருக்குமானால் நாம் வெற்றியடைந்தே தீருவோம். அநியாயத்தை எதிர்ப்பதற்கு அறிகுறியாகவே சிறை செல்கிறோம்.

சிறையில் எவ்வளவுக் கெவ்வளவு கஷ்டப்படுகிறோமோ, எவ்வளவுக்கெவ்வளவு கொடுமையாக நடத்தப்படுகிறோமோ, எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக நமக்கு வெளியுலகத் தொடர்பு அறுபடுகிறதோ, எவ்வளவுக்கெவ்வளவு நாம அளிக்க விரும்பும் அநியாயத்துடன் தொடர்புகொள்வதினின்றும் விலகுகிறோம்; அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய தியாகம் நமது இலட்சியத்தை அடைவதற்கு பயன்படும்.

மேனாட்டில் அநேக தியாகிகள் சுதந்திரத்துக்காகவும் மதத்துக்காகவும் சிறை சென்றிருக்கின்றனர். இருட்டறையில் அடைபட்டிருக்கின்றனர்.

சொல்லொணாச் சித்திரவதைகளை அனுபவித்திருக்கிறார்கள். நான் கூறிய தத்துவம்தான் அவர்களுக்கு இத்தகைய காரியங்களை மேற்கொள்வதற்கு வேண்டிய ஆற்றலையும் மன உறுதியையும் அளித்தது. நம்முடைய தேச மக்களும் அவ்விதமே நடப்பார்கள் என்றுதான் தோன்றுகிறது. ஆயினும் அந்தப் பெரியோர்களிடம் காணப்பட்ட மன உறுதியிலும் தியாக புத்தியிலும் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இன்னும் நம்மிடம் காணப்படவில்லை. நம்முடைய வெற்றி சிறைக்கு வருபவருடைய எண்ணிக்கையைப் பொறுத்தன்று. அநியாயத்துடன் ஒத்துழைக்க மாட்டோம் என்று தெள்ளவாக உணர்ந்து சிறைக்கு வருவதையே பொறுத்திருக்கின்றது. ஏதோ ஒரு பலனை உத்தேசித்து சிறையை நிரப்புவதால் எவ்வித பலனும் உண்டாகாது. இந்த அடிமை நிலைமையை என்னால் பொறுக்க முடியாது என்று மனமார உணர்ந்து சிறை செல்வதே அந்த நிலைமையை மாற்றும்.

— ராஜாஜியின் 'ஜெயில்'' டயரி

( கல்கி 8-10-72 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## ஆட்சியாளர்களின் முதல் தோல்வி!

அவசர காலச்சட்டத்தைப் பயன்படுத்தி காங்கேசன் துறைத்தொகுதியில் குடியாட்சி மரபுப்படி உரிய காலத்தில் நடைபெறவேண்டிய இடைத்தேர்தலை ஆட்சியாளர்கள் பின்போட்டுள்ளனர்.

ஆட்சியாளர்களின் சனநாயக விரோதமான இப்போக்கு நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. இப்படிச் செய்வார்கள் என்று நாம் முன்னரேயே எதிர்பார்த்திருந்தோம்.

ஆட்சியாளர்கள் முறைப்படி உரியநேரத்தில் காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தியிருந்தால், அது தான் உண்மையில் வியப்புக்குரியதே தவிர அவசரகாலச் சட்டத்தின் கீழ் இடைத்தேர்தலைத் தள்ளிப்போட்டது ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமல்ல.

ஏனெனில் சனநாயக மரபுகளையும் சம்பிரதாயங்களையும் மக்களின் சுதந்திரத்தையும் இந்நாட்டில் குழிதோண்டிப் புதைத்து விட்டு, இந்நாட்டை பாஸிஸ, சர்வாதிகாரப்பாதையில் இட்டுச்செல்வதிலேயே ஆட்சியாளர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

அதுவும் காங்கேசன் துறை இடைத்தேர்தல் ஆட்சியாளர்களுக்கு ஒரு சவாலாக அமையவிருக்கிறது.

புதிய அரசியல் சட்டத்தையும், தம்மையும் தமிழ் பேசும் மக்கள் ஆதரித்து வருகிறார்கள் என்று கோயபல்ஸ் வழியில் பொய்ப்பிரச்சாரம் நடத்தி வெளியுலகத்தின் கண்களில் மண்ணைத் தூவி வரும் ஆட்சியாளர்களின் முகமூடி — காங்கேசன் துறை இடைத்தேர்தல் நடைபெறுமானால் கிழித்தெறியப்பட்டு விடும்! அம்பலப்படுத்தப்பட்டுவிடும்!!

இந்நாட்டுத்தமிழ்த்தேசிய இனம் புதிய அரசியல் சட்டத்தினை முழுமூச்சுடன் எதிர்க்கின்றது— தமிழ் மக்கள் சுயநிர்ணய அடிப்படையில் சிங்களமக்களிடமிருந்து பிரிந்துஒரு தனி அரசின் கீழ் வாழத்தீர்மானித்து விட்டார்கள் — என்பதையெல்லாம் சனநாயக ரீதியில் உலகுக்கு காங்கேசன் துறை இடைத்தேர்தல் முடிவு எடுத்துக்காட்டி விடும்!

இது எல்லாம் சிங்கள அரசுக்கு நன்றாகத்தெரியும். அதனால்தான் தந்தை செல்வாவின் சவாலை—அல்ல அல்ல— தமிழ்த்தேசிய இனம் ஒரே குரலில் விடுத்த அறைகூவலை— ஏற்றிட அஞ்சி, கோழைத்தனமாக அவசரகாலச்சட்டத்தின் கீழ் பதுங்கிவிட்டது!

அதுமட்டுமல்ல — நாம் அறிந்தவரை — சிங்கள ஆட்சிக்கு சிந்துபாடிவரும் எந்த ஒரு ஒத்துழைப்புத் தமிழரும், அரசாங்கத்தின் சார்பில் புதிய அரசியல் சட்டத்தையும், அரசாங்கத்தின் கொள்கைகளையும் முன்வைத்து தந்தை செல்வாவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு அஞ்சித்து முன்வரவில்லையென்றும் தமிழ் இனத்தின் தேசிய எழுச்சிக்கு எதிராக போட்டியிட வைப்பதற்கு சிங்கள அரசால் ஒரு தமிழரைக்கூடப் பிடித்துக்கொள்ள முடியவில்லையென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

இது உண்மையானால் — தமிழ் தேசிய இனத்துக்கு கிடைத்த முதல வெற்றி இது; சிங்கள ஆட்சியாளர்களுக்கு கிடைத்த முதலாவது படுதோல்வி இது; என்று குறிப்பிட்டுக் கூறவிரும்புகிறோம்.

ஆம், காங்கேசன்துறை இடைத்தேர்தலை அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தள்ளிவைத்ததன் மூலம் சனநாயகக் களத்தில் முதலாவது ரவுண்டில் ஆட்சிபீடம் படுதோல்வியைத் தழுவிக்கொண்டுவிட்டது. இடைத்தேர்தலை, எப்பொழுது நடத்தினாலும் அரசாங்கம் அதில் மண் கவ்வப்போவதும் உறுதி.

இடைத்தேர்தலைக் காலம் கடத்துவதால், தமிழ் மக்களின் எதிர்ப்புணர்ச்சி மங்கிமறைந்துவிடும்; அப்போது போட்டியிட்டால், தங்கள் வேட்பாளரின் கட்டுப்பணத்தையாவது காப்பாற்றலாம் என்று ஆட்சியாளர் நினைக்கக்கூடும். ஆனால் இடைத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதன் விளைவாக, தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வும், வைராக்கியமும் மேலும் அதிகரித்துள்ளதே தவிர கிஞ்சிற்றும் குறையவில்லை.

தமிழர் கூட்டணித்தலைவர் தந்தை செல்வாவின் பதவி விலகல்—தமிழ்தேசிய இனத்தின் சுதந்திரப்போராட்டத்தின் முதலாவது கட்டமே. இடைத்தேர்தலை ஒத்திவைத்ததன் மூலம் தமிழ்தேசிய இனத்திடம் அரசு இப்போது தார்மீகரீதியில் தோல்வியடைந்துவிட்டது!

தமிழர் கூட்டணி, தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை மேலும் விரிவுபடுத்திக்கொண்டுசெல்லும் பணியில் தாமதமின்றி இனி ஈடுபடவேண்டும். செப்டம்பர் 30ம் நாள் தமிழ் ஈழத்தின் ஐந்து தலைநகரங்களில் நடைபெற்ற கூட்டங்களுக்கு திரண்ட மக்கள் வெள்ளமும், அக்டோபர் 2 ஹர்த்தால் வெற்றியும், வடக்கிலும் கிழக்கிலும் தந்தை செல்வாவுக்கு அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்புக்களும், விடுதலைப் போராட்டத்துக்கு மக்கள் தயாராகிவிட்டனர் என்பதற்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

மக்களின் விடுதலை உணர்ச்சியை அவம் போகவிடாது ஆக்கரீதியில் பயன்படுத்தி, தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை நடத்தி முடிக்கும் மாபெரும் பொறுப்பு தமிழர் கூட்டணியிடமேயே இன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு சோர்வும், சலிப்பும் ஏற்பட்டு அடிமை வாழ்வுக்குப் பழக்கப்படு முன்னர், தமிழர் கூட்டணி செயலில் இறங்கவேண்டும்.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள இந்த மகத்தான பொறுப்பை உணர்ந்து தமிழ் பேசும் மக்களை போராட்டப்பாதையில் நடத்திச்சென்று சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆற்றவேண்டிய தியாகவேள்வியில் தமிழர் கூட்டணி மேலும் தாமதமின்றி குதிக்கவேண்டுமென்பதே விடுதலை விரும்பிகளின் ஒரே ஆசையாகும்.

# இலங்கை வானொலி தமிழ்ப் பகுதி கம்யூனிஸ்டுகளின் கூடாரமா?

## அநீதியும் ஊழலும் மலிகின்றன! ஆறு அறிவிப்பாளருக்குக் கழுத்தறுப்பு!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பகுதியில் இப்போது கொம்யூனிஸ்ட் குஞ்சுகளின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கிறது. இதன் காரணமாக அங்கு பல அநீதிகளும் முறைகேடுகளும் மலிந்து வருவதாகவும், ஊழலின் உறைவிடமாக வானொலி தமிழ்ப்பகுதி மாறி வருவதாகவும் பல புகார்கள் நமக்கு கிடைத்துள்ளன.

'திடீர்' அமைச்சர் குமாரசூரியரின் ஆலோசனையின் பேரில் வானொலித் தமிழ்ப் பகுதி ஆலோசனைச்சபைக்கு நியமிக்கப்பட்ட பிரேம்ஜி— சிவத்தம்பி — கைலாசபதி— செஞ்சட்டைக் கும்பல் சர்வாதிகாரத்தனமாக எதேச்சையாக இயங்கி வருகிறதாக தெரிகிறது. இவர்களது அற்பத்தனமான சர்வாதிகாரப் போக்கிற்கு தமிழ் சேவையின் நீண்டகால அனுபவமும், திறமையும் ஆற்றலுமுள்ள அறிவிப்பாளர்களும் பிரதியெடுக்கும் வானொலி எழுத்தாளர்களும் பலியாகி வருகிறார்களாம்.

வானொலியின் அறிவிப்பாளர்களாக நீண்ட காலமாகப் பணியாற்றிவந்த பல அனுபவஸ்தர்கள், அப்பதவிகளிலிருந்து கீழிறக்கப்பட்டு வேறு பதவிகளுக்கு நியமிக்கப்படுவதாகவும், அவர்கள் இதை ஆட்சேபிக்க முனைந்தால், வேலையிலிருந்து நிறுத்தப்படுவர் என்று பயமுறுத்தப்படுவதாகவும் தெரிய வருகிறது.

வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகள் பலவற்றையும் பிரேம்ஜி — கைலாசபதி — சிவத்தம்பி கும்பல் தங்களுக்குள்ளேயே பங்குபோட்டு எடுத்துக்கொண்டு அதிலிருந்து கிடைக்கும் பணத்தையும் அபகரித்துக்கொள்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

வானொலியில், 1972 அக்டோபர் 23ம் திகதிவரை ஒலிபரப்பாளராக வேலை செய்துவந்த ஆறு பேர் திடுதிப்பென வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். முறையாக மூன்று மாதகாலம் டயிற்சி பெற்ற 1972 மார்ச் மாதம் வேலைக்கு சேர்ந்த இவர்களை, இப்போது திடுதிப்பென்று தகுதியற்றவர்கள் என்று கூறி வேலையிலிருந்து நீக்கிவிட்டிருக்கிறது ஆலோசனைச்சபை.

இவர்கள் தங்களை அநீதியாக வேலைநீக்கம் செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்தி நீதி வழங்க வேண்டுமென்று ஒலிபரப்புத்துறை அமைச்சரிடம் கோரியிருக்கிறார்கள்.

வானொலியில் பணியாற்றும் தமிழுணர்ச்சியுள்ளவர்களையும், தமிழ்ப்பற்றுள்ளவர்களையும் தமிழரசுக்கட்சி அனுதாபிகள் என்று கூறி சீட்டுக்கிழித்து அனுப்பி வருகிறது கம்யூனிஸ்டுகளின் ஆலோசனைச்சபை.

அநீதியாக வேலைநீக்கம் செய்யப்பட்டு வேலையற்றிருக்கும் இந்த இளம் அறிவிப்பாளர்கள், தங்கள் நிலையை குமாரசூரியரிடம் எடுத்துக்கூறச் சென்றபோது, சிறிதுகூட மரியாதை காட்டாமல் விரட்டப்பட்டார்களாம்.

[illegible] யிருந்த இவர்களுக்கு வயிற்றில் அடித்துவிட்டு, வேறு வருமானம் உள்ளவர்களே ஒலிபரப்பு நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு அதிலிருந்து கிடைக்கும் சன்மானங்களையும் விழுங்கி ஏப்பம்விட்டு வருகிறார்கள்.

தமிழ் நிகழ்ச்சிகளிலும் தமிழ்ப்பகுதி நிர்வாகத்திலும் இவ்வளவு தில்லுமுல்லுகளும் முறைகேடுகளும் நடந்தும், ஒலிபரப்புத்துறை அரை அமைச்சர் மஜீத் எதையும் கவனிக்காது குறட்டைவிட்டு தூங்குகிறாராம். குமாரசூரியரை கைக்குள் போட்டுக்கொண்டு கொம்யூனிஸ்ட் எடுபிடிகள் வானொலியில் கும்மாளம் அடித்து வருகிறார்கள்.

வானொலியில் நடைபெறும் இன்னும் பல தில்லுமுல்லுகள் நம்கையில் இருக்கின்றன. ஒவ்வொன்றாக அவற்றையெல்லாம் அம்பலப்படுத்துவோம்.

— எஸ். ஆர். எம்.

## 'விடுதலை'யின் தறுதலைத்தனம்

தமிழ்பேசும் மக்கள் இன்று கட்சி பேதங்களைக் கடந்து ஓரணியாய் தமிழர் கூட்டணியின்கீழ் ஒன்று திரண்டு உரிமைப் போராட்டத்தில் குதித்துள்ளதைக் கண்டு, தமிழினத்தின் எதிரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தமிழினத்தின் ஒற்றுமையை முறியடிக்க ஆளுங்கட்சியினரும் ஆளுங்கட்சிக்கு துதிபாடும் ஏடுகளும் நடத்தும் சதிமுயற்சிகளை தமிழினம் அவதானமாகக் கண்டு எச்சரிக்கையுடன் இருந்துவருகிறது.

ஆனால் தமிழர்களுக்கு 'சுயாட்சி' பெற்றிடப் போராடுவதாக கூறிக்கொள்ளும் சுயாட்சிக் கழகத்தின் ஏடான 'விடுதலை'யும் இந்த முயற்சியில் அதாவது தமிழ் தேசிய இனத்தின் ஒற்றுமையைக் கெடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதுதான் நமக்கு வியப்பையும், வருத்தத்தையும் அளிப்பதாக உள்ளது.

முட்டாள் மயிர் பிடுங்குவதுபோல- கிளிநொச்சி பா. உ. இந்த நாட்டில் இல்லாத வேளையில் பதில் எழுதப்பட்டு 29.10.72ல் சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்டிருந்த சுயுக்தியாரின் ஒரு பதிலைப் பயன்படுத்தி, தமிழர் கூட்டணியைப் பிளவுபடுத்தும் ஈனத்தனமான சதியில் 'விடுதலை' 15.11.72 இதழ் இறங்கியிருப்பது கண்டு மிகவும் வருத்தப்படுகிறோம்.

விடுதலை ஏட்டின் 'சதி' நோக்கத்தை திரு. ஆனந்தசங்கரியும் அறிவார்; நாமும் அறிவோம்; தமிழ் மக்களும் அறிவார்கள். எனவே கூட்டணிக்குள் பகை மூட்டும் சகுனி வேலை மட்டும் ஒருபோதும் வெற்றியளிக்காது என்பதை விடுதலையாருக்கு தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறோம்.

தமிழினத்தின் விடுதலைக்கு குரல்கொடுக்கும் அணிகளிடையே போட்டியும் பிளவும் இருக்கக்கூடாதென்ற ஒரே காரணத்தினாலேயே விடுதலையில் நம்மைப் பற்றியும் தமிழர் தலைவர்களைப் பற்றியும் எழுதப்படும் தரம்கெட்ட எழுத்துக்களுக்கு பதில் அளிக்காது மௌனம் சாதித்து வருகிறோம்.

ஆயினும், தமிழர் ஒற்றுமைக் கோட்டையினை உடைக்க 'விடுதலை' முயன்றால் அதை முறியடிப்பது எமது கடமையாகும். —ஆசிரியர்.

## சட்ட மறுப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மௌனவும் இவர்கள் வலியுறுத்தவுள்ளனர்.

அடையாள அட்டையில் சிங்களமொழிக்கு அளித்துள்ள இடம் தமிழுக்கு தரப்படாததால், அதற்கு எதிராக என்ன நடவடிக்கையெடுப்பது என்பது பற்றியும் நடவடிக்கைக்குழு ஆராயவிருக்கிறது.

யாழ் மாவட்டத்திலுள்ள சில தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை கல்வியமைச்சு திணிக்க தீர்மானித்துள்ளதை எதிர்த்து தமிழர் கூட்டணி உடனடியாக எடுக்கவேண்டிய எதிர் நடவடிக்கை குறித்தும் நடவடிக்கைக் குழு தீர்மானிக்கும் என்று தெரிகிறது.

பொதுவாக அரசியல் சட்டத்துக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய அடுத்த நடவடிக்கைபற்றி தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு தீர்மானிக்கும் என்று அறியப்படுகிறது.

## சூரியரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யா, முல்லைத்தீவு, மல்லாகம், சங்கானை, சாவகச்சேரி கிராம நீதிமன்றங்கள்.

வடமாகாணத்தில் தமிழ் தட்டச்சாளர் இல்லாத நீதிமன்றங்கள் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம், ஊர்காவற்றை மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மல்லாகம், சங்கானை, சாவகச்சேரி கிராம நீதிமன்றங்கள்.

### கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணத்தில் தமிழ் சுருக்கெழுத்தாளர் இல்லாத நீதிமன்றங்கள்: ஏறாவூர், பட்டிருப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, நிலாவெளி மூதூர் கிராம நீதிமன்றங்கள்.

தமிழ் தட்டச்சாளர் இல்லாத நீதிமன்றங்கள்: ஏறாவூர், பட்டிருப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, நிலாவெளி மூதூர் கிராம நீதிமன்றங்கள்.

### தமிழில் பதிவு

வடமாகாணத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் எல்லாம் தமிழில் பதிவு செய்யப்பட்ட நீதிமன்றங்கள் முல்லைத்தீவு, சாவகச்சேரி கிராம நீதிமன்றங்கள்.

கிழக்கு மாகாணத்தில் எல்லா நடவடிக்கைகளையும் தமிழில் பதிவுசெய்த நீதிமன்றங்கள் கல்முனை மாவட்ட நீதிமன்றம் ஏறாவூர், அக்கரைப்பற்று கிராம நீதிமன்றங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கத் தாமதமின்றி உரிய நடவடிக்கை எடுங்கள்!'

## இந்தியப்பிரதமர்,எம்.பீக்களுக்கு குடிபெயர்ந்த தமிழர் பேரவை மகஜர்!

## குடியரசுத் தலைவருக்கும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் கோரிக்கை!

இலங்கைத் தமிழர் படும் இன்னல்களை உணரும்படியும் இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கு ஐ. நா. சபை மூலம் நடவடிக்கையெடுக்க முன்வரும் படியும் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கும் படியும் இந்திய அரசை குடிபெயர்ந்த இலங்கைத் தமிழர் பேரவைத் தலைவர் திரு. எ. எல். மணவைத்தம்பி ஒரு மகஜர் மூலம் வற்புறுத்தியுள்ளார்.

இந்த மகஜரை அவர், இந்தியப் பிரதமர், இந்திய குடியரசுத்தலைவர், இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்தியாவிலுள்ள வெளி நாட்டுத் தூதுவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த மகஜரில் திரு. மணவைத்தம்பி மேலும் கூறியிருப்பதாவது:-

''தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களான தாங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையை உங்கள் மேலான கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறோம்.

'அக்டோபர் 2ம் நாளிலிருந்து காந்திய வழியில் தங்கள் மனித அடிப்படை உரிமைகளை மீட்டுக்கொள்ளும் இறுதிப்போராட்டத்தில் இலங்கையில் வாழும் 22 இலட்சம் பூர்வீக தமிழ்க்குடிகளும், 13 இலட்சம் இந்திய வம்சா வளித் தமிழர்களும் ஒன்றாக இணைந்து இறங்கியுள்ளார்கள்.

### செல்வா ராஜினாமா

'தமிழர் கூட்டணித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து —இலங்கைத் தமிழர்களின் ஆறு அம்சக்கோரிக்கையை முன்வைத்து — தமிழர்களின் கோரிக்கையிலுள்ள நியாயத்தை உலகம் அறியச் செய்வதற்காக மீண்டும் அரசாங்கத்தை எதிர்த்து இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார்.

'இலங்கைத் தமிழர்கள், தங்கள் ஆறு அம்சக்கோரிக்கையின் அடிப்படையில் புதிய அரசியல் சட்டத்தை திருத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக அரசுக்கு மூன்று மாதத் தவணை கொடுத்திருந்தார்கள். மூன்று மாதங்களின் முடிவில் தங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்க மறுத்து விட்டதை உணர்ந்த பின்னர் தான் — அக்டோபர் 2ல் இருந்து இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள்.

### உள்நாட்டுப் பிரச்சினையா?

''இது வெளிப்பார்வைக்கு, இலங்கை அரசுக்கு உட்பட்ட உள்நாட்டுப்பிரச்சினை போலத்தோற்றமளிக்கலாம். ஆனாலும் இது உள்நாட்டுப்பிரச்சினை அல்ல. 1961ம் ஆண்டு நடைபெற்ற இலங்கைத்தமிழர்களின் போராட்டத்தின் போது அறிஞர் அண்ணா அவர்களால் குறிப்பிடப்பட்டது போன்று, இது முழு உலகத்தின் கவனத்துக்கு உரிய பிரச்சினையாகி விட்டது. ஒரு கணவனும் மனைவியும் வீட்டுக்குள் அமைதியாக வாழ்ந்தால் அது குடும்பப் பிரச்சினை; ஆனால் கொலை வெறி பிடித்து, கணவன் மனைவியைக் கொல்ல முயன்றால் அது குடும்பப்பிரச்சினை ஆகமுடியாது. அந்தச் சமயத்தில் மனைவியை கொலையிலிருந்து மீட்பதற்கு அயலவர்கள் உதவிக்கு ஓடிச்செல்வதில் தவறில்லை. இலங்கையில் இன்று நடப்பதும் இது தான. இனக்கொலையே இலங்கையில் நடக்கிறது.

### பூர்வீகத் தமிழர்

'இலங்கைத்தமிழர் பிரச்சினையை எடுத்து விளக்கு முன்னர், அங்குள்ள நிலையை எடுத்து விளக்கவேண்டும். இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் 22 இலட்சம் இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் பூர்விககுடிகள். அவர்களுக்கு இந்தியாவுடன் எவ்வித தொடர்பும் கிடையாது. 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் வாழ்ந்து வரும் தொன்மை மிக்க பூர்விக குடிகள் அவர்கள். அவர்கள் மொழி தமிழ். அவர்களது பண்பாடும், பழக்க வழக்கங்களும், மதநம்பிக்கைகளும் இந்தியாவில் வாழும் தமிழர்களோடு ஒத்ததே. ஆனால் அவர்கள் தனித்துவம் மிக்கவர்கள். வரலாற்று ரீதியாக சிங்களவர்கள் இலங்கைக்கு வருமுன்பே அங்கு வாழ்ந்தவர்கள் அவர்கள்.

'இலங்கையின் இந்தப் பூர்விகத் தமிழர்களை, இரண்டு தலைமுறைகளுக்கு முன் இந்தியாவிலிருந்து சென்று குடியேறிய இந்திய வம்சாவளி தமிழர்களுடன் சமமாக கணிப்பது ஒரு வரலாற்றுத் தவறு ஆகும். இந்திய வம்சாவளியினரான தமிழர்கள் 13 இலட்சம் பேர். இந்த இருவகைத் தமிழர்களையும் பற்றி சரியான தெளிவில்லாதுஇந்திய மக்கள், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை குழப்பமான கண்ணோட்டத்தோடு பார்த்து வருகிறார்கள்: குடியேறிய தமிழர்களின் போராட்டம் இது என்று நினைக்கிறார்கள். இது தவறானது. இலங்கையின் பூர்விக குடிகளான 22இலட்சம் தமிழர்களும் குடியேறிய தமிழர்கள் 13 இலட்சம் பேரும் ஒரு பொதுவான நோக்கத்தின் கீழ் ஒன்று பட்டு தங்கள் மனித அடிப்படை உரிமைகளுக்கு இன்று போராடுகிறார்கள்.

### 1948 முதல் போராட்டம்

'சுதந்திரம் கிடைத்த 1948ம் ஆண்டிலிருந்தே இலங்கை தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்குப்போராடி வருகிறார்கள். சிங்களவெறியர்களால் 1958ம் ஆண்டு தாக்கப்பட்டபோதும் இலங்கைத்தமிழர்கள் காந்திய நெறி முறையை தழுவியே நின்றார்கள். 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

'சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தார்கள். 1949ம் ஆண்டு, இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தை கொண்டு வந்து, 10 இலட்சம் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தார்கள்; இதன் மூலம் எட்டு தமிழர்களின் பாராளுமன்ற ஸ்தானங்களை இல்லாமற் செய்தார்கள். 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக்கப்பட்டது— தமிழின் சகல அந்தஸ்தும் பறிக்கப்பட்டது. இதன் தவிர்க்க முடியாத விளைவாக தமிழர்களின் வேலை வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டன; தமிழ் வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தள்ளப்பட்டனர். சுருக்கமாகக் கூறின் தமிழர்கள் இரண்டாம் பிரஜைகள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர்.

### கல்வியுரிமை பறிப்பு!

'மீண்டும் 1970ம் ஆண்டு தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழர்களின் உயர் கல்வி பறிக்கப்பட்டது. பாரபட்சம் காட்டப்பட்டது. பல்கலைக்கழக பொறியியல் வகுப்புக்களுக்கு தெரிவு செய்யப்படுவதில், சிங்களவர்கள், தமிழர் என்ற இனபேதம் காட்டப்பட்டது. தமிழர்கள் 265 புள்ளிகளும், சிங்களவர்கள் 240 புள்ளிகளும் எடுக்க வேண்டும் என்ற கடைந்தெடுத்த பாரபட்சம் காட்டப்பட்டது. இதனால் தமிழர்களுக்கு சட்டரீதியாக

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் கல்லூரிகளின் நிர்வாகிகளே! அடிமை மனப்போக்கை அகற்றுவீர்!

## தமிழ் பண்பாட்டினைப் பின்பற்றிட முன்வருவீர்!

சமீபத்தில் ரஷ்ய நாட்டுத் தேசிய தினக் கொண்டாட்டத்தில் தமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை கண்டிக்கப்பட்டதை ஆட்சேபித்து செஞ்சீனாவின் பிரதிநிதிகள் குழு கூட்டாக வெளிநடப்புச் செய்தது தெரிந்ததே!

தமது நாட்டினை இழித்துப் பழிக்கப்படும் பொழுது அப்படி நடந்து கொள்வது சர்வதேச சம்பிரதாயமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

கல்லூரி விருந்துகளில் வைபவங்களில் மாணவர்களது போதனா மொழிக்குக் கதவடைப்புச் செய்து புறக்கணிப்பதை ஆட்சேபித்து அதிதிகளாக வரும் பிற கல்லூரிகளின் மாணவ பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்வதாயின், தங்கள் கல்லூரியின் மானம் புதினப்பத்திரிகைகள் வாயிலாகக் கப்பல் ஏறுதா?

தங்கள் கல்லூரி மாணவர் கன்மான உணர்வால் அதே போல் நடந்து கொண்டால் தானும் அவர்கள் நடத்தையில் தவறு காணமுடியுமா? கல்லூரி என்பதால் கண்டிப்பிரசுள் அல்லது தண்டிப்பிர்கள், விருந்தினர்களாக வரும் மாணவர் பிரதிநிதிகளைத் தண்டி[illegible] [illegible] அலம்ப [illegible] லாத காரணத்தால் ஐரோப்பியர் யாவரும் கரண்டி முள்ளுத் தீனியையே கையாளுகின்றனர். ஆயினும் விருந்துகளின் போது தம் தம் நாட்டு மொழிகளை விட்டு வேறு மொழிகளை அவர்கள் பேசுவதில்லை.

கரண்டி முள்ளுத் தீனிக்காகவேனும் நாம் எதற்காக இராப்போசன விருந்து உரையாடல்களுக்கு போதனா மொழியான தமிழ் மொழியை உபயோகிக்கக்கூடாது?

**நக்கீரன்**

விருந்துகளில் மாணவர் தானும் அயமாகவா பேசுகிறார்கள்? ஆசிரியர் எழுதிக் கொடுத்ததைக் கிளிப்பிள்ளைகளாட்டம் நெட்டுருப் பண்ணி ஒப்பிக்கிறார்கள் பலர் முன்னிலையில். சமீபத்தில் நடந்த விருந்து ஒன்றில் விருந்தினராக வந்திருக்க வேண்டிய ஒருவர் வரவில்லை. ஆயினும் அவருக்கும் சேர்த்தே வரவேற்புரை தயாரிக்கப் பட்டிருந்தது. பேசிய மாணவி வருகை தராத விருந்தினருக்கும் சேர்த்து வரவேற்புரை நல்கிவிட்டு [illegible] [illegible] ரோமன் எழுத்தில் லத்தீன், கிரேக்க, பிரஞ்சு மொழிகளில் பேச்சுக்களை எழுதிக் கொடுத்தாலும் பாடமாக்கிய பேச்சை வெழுத்து வாங்க மாட்டார்களா? என்ன. வணிகர் மொழியான ஆங்கிலத்திலும் சர்வதேச கலாச்சார மொழிகளான அம்மொழிகளில் ஓசை நயம் செவிக்கும் விருந்தாக இருக்கும். மொழி புரியாமையால் யாரும் தவறு சொல்லவும் இடமில்லை.

மாணவர் புரிந்துகொள்ள முடியாத மொழியில் நிகழ்ச்சிகள் இடம்பெற கல்லூரி நிர்வாகிகளது இயலாமை தவிர வேறுகாரணம் உண்டோ?

விருந்துக்கு மாணவர் வேட்டிகட்டி வருவதானால் தானுனல் போட்டு சால்வையும் தரித்துவர வேண்டுமாம்! கல்லூரி அதிபர் ஒருவர் சொல்லுகிறார் பெத்தர்சனி!

வேட்டி கட்டி வருவதானல் பாடசாலைக்கு வருடம் முழுவதும் வேட்டியையே உடுத்தி வரவேண்டுமென்பது பிரின்சிபால் அபிப்பிராயம். [illegible] [illegible]

முன்னவரோ காலச்சட்டை [illegible] கோட்டு இருந்தால் போட்டுவரவேண்டுமென்றும் அல்லாவிட்டால் டை மட்டும் கட்டிவந்தால் போதுமானதென்றும் தெரிவித்துள்ளார்.

மேல்நாட்டு உடையாயின் நிறைவாக உடையணிய வேண்டாமோ? பீத்தல் பறங்கிகளைப்போல் மாணவர்கள் விருந்துகளில் கலந்து கொள்ள அனுமதியாது. கோட்டும் சூட்டுமாக வரவியலாதவர்களைத், தேசிய உடையில் நிறைவாக உடுத்தி வாருங்கள் என்று கேட்டிருந்தால் கண்ணியமாக இருந்திருக்கும்.

எமது கல்லூரி நிர்வாகங்கள் அடிமை மனப்போக்கை எப்போது கைவிடப் போகின்றனவோ, கல்லூரி மலர்களில் என்றுதான் அதிபர் அறிக்கை, ஆசிரியர் எண்ணம், ஒளிப்படங்களிற்கான அடிக்குறிப்புகள், முகப்பு அட்டையை அலங்கரிக்கும் எழுத்துக்கள் எப்போது தமிழாக மாறுமோ? போதனா மொழிக்குக் கதவடைப்புச் செய்வதும், அதை இரண்டாந்தர மொழியாக மதிப்பதும் மாணவ மாணவர்களிடம் தம் போதனா மொழி குறித்துத் தாழ்வு மனப்பான்மையை [illegible] [illegible] [illegible] [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஆட்சியாளர்களுக்கு பண்டிதர் சவால்!

## “குமாரசூரியரைப் போட்டிக்கு நிறுத்திக் கட்டுப்பணத்தையாவது காப்பாற்றுவீர்களா? அப்படியானால் பதவி துறக்க நான் தயார்!”

“அரசாங்கத்துக்கு துணிவிருந்தால் காங்கேசன் துறை இடைத்தேர்தலில் தந்தை செல்வாவை எதிர்த்து அமைச்சர் குமாரசூரியரை போட்டிக்கு நிறுத்தட்டும். அந்தப்போட்டியில் குமாரசூரியர் கட்டுப்பணத்தையாவது காப்பாற்றுவாரென்றால், நானும் ஏனைய தமிழர் கூட்டணி பா. உ. க்களும் பதவி துறக்கவும் தயாராக இருக்கிறோம். நான் இதை ஒரு சவாலாகவே விடுக்கிறேன் —”

— இவ்வாறு தேசிய அரசபேரவையில் வரவு செலவுத் திட்டம் மீது உரையாற்றிய காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் முழக்கமிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

நிதி அமைச்சரின் சிங்களப் பிரசங்கம் ஆங்கிலத்திலும் ஹன்சார்ட் புத்தகத்தில் வெளிவந்திருக்கிறது. ஆனால் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. குடியரசு பிறந்த பின்னர் அரசாங்கத்தின் கொள்கை தமிழைப் புறக்கணிப்பதாகவே இருக்கிறது. அதற்கு இந்த வரவு செலவுத் திட்டம் தமிழில் இல்லாதது ஒரு உதாரணமாகும்.

தமிழுக்கு சம அந்தஸ்து கோரிய நிதி அமைச்சர் தமது பிரசங்கத்துக்கே தமிழில் இடமளிக்கவில்லை. இப்படி தமிழ் ஒதுக்கப்பட்டுக் கொண்டே வருகிறது.

எடுத்த விஷயங்களில் எல்லாம் தமிழுக்கு முக்கியத்துவம் — உரிய இடமளிக்கப்படவில்லை.

தேசிய அரசுப் பேரவை ஆரம்பமானதற்குப்பின்னர் நடைபெறும் முதலாவது வரவு செலவுத்திட்ட விவாதம் ஆகையால் இதில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை விளக்கமாக கூறவேண்டியிருக்கிறது.

“நிதியமைச்சரின் பேச்சில் இந்நாட்டு மக்கள் சுதந்திர தன்னுரிமை இறைமை கொண்ட புதிய அரசியல் சட்டமொன்றை உருவாக்கிக் கொண்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதனை நாம் ஏற்கவில்லை. யாரோ சில இனத்துரோகிகள் இந்த அரசாங்கத்துடன் சேர்ந்திருக்கலாம். அவர்கள் சேர்ந்திருப்பதைக் காண்பித்து அரசாங்கம், தமிழ் மக்கள் தங்களை ஆதரிக்கிறார்கள் என்று மனப்பால் குடிப்பது சரியானதல்ல.

‘இந்தநாட்டுதமிழ்மக்கள் இந்த அரசியல் திட்டத்தை ஏற்கவில்லை. அவர்கள் தங்களது மொழி அரசியல் உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களும் இந்த நாட்டின் ஒரு பகுதி மக்கள் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். தமிழ் மக்கள் இந்நாட்டில் அடிமைகளாக அரசியல் உரிமையற்றவர்களாக இருக்கின்றனர். தமிழ் மக்களின் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல.

இச்சபையில் உறுப்பினராக இருக்கவேண்டுமென்ற நப்பாசையில் தமிழ்ப் பிரதிநிதிகள் தொடர்ந்து பதவி வகிக்கவில்லை. எமது மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு இச்சபையையும் ஒரு பொது மேடையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதற்காகவே நாம் இச்சபையில் தொடர்ந்து இருக்கிறோம்.



பத்திரிகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் எமது கருத்துக்கள் வெளிவராமல் போய்விடும். அதனால்தான் அதைக் கண்டிக்கிறோம். இச்சபையில் தான் இவைகளைப் பற்றி பேசமுடியும் ஆகையால்தான் நாம் இங்கு இன்னுமிருக்கிறோம். இங்கிருந்தே குரல் எழுப்பவேண்டியிருக்கிறது.

‘26 லட்சம் தமிழ் மக்களுடைய சார்பில் சமர்ப்பித்த கோரிக்கைகளைப் புறக்கணித்து, தமிழ்த் துரோகிகளின் உதவியுடன் இந்த அரசாங்கம் காரியங்களைச் செய்கிறது.

‘தமிழர் கூட்டணி தமிழர்களின் அடிப்படை உரிமைக்காகப் போராடுகின்றது. அது சிங்கள மக்களை எதிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதொன்றல்ல.

‘இந்த நாட்டுத்தமிழ் மக்கள் அரசியல் சட்டத்தை ஏற்கவில்லை. அதை எரித்தார்கள். ஹர்த்தால் அனுஷ்டித்தார்கள். பலர் இன்னும் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மீது வழக்குத் தொடரவேண்டும் அல்லது விடுதலைசெய்யவேண்டும்.

‘பொது நிருவாக சேவைக் குழு, உள்ளூராட்சி நிருவாக ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை வானொலி கூட்டுத்தாபனம், திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் ஒரு தமிழர் கூட நிருவாக சபைகளுக்கு நியமிக்கப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் உள்ள 16 நீதிமன்றங்களில் 2 கிராம நீதி மன்றங்கள் மட்டுமே தமிழ் மொழியில் நடவடிக்கைகளை நடத்துகின்றன. கிழக்கு மாகாணத்தில் உள்ள 9 நீதிமன்றங்களில் 3 நீதிமன்றங்களில் மட்டுமே தமிழில் அலுவல் [illegible]

(9-ம் பக்கம் பார்க்க)

### செல்வாவை ஆதரித்து சிவநாயகம் பிரசாரம் செய்வாரா?

தினபதி சொன்னபடி தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா தமது பா. உ. பதவியை துறந்துவிட்டதாகவும், இது தினபதிக்கு கொள்கை ரீதியில் கிடைத்த வெற்றியென்றும், தமது வழிக்கு வந்துவிட்ட தமிழரசு கட்சியினரை தாக்குவது தவறென்றும், அது சரிப்பதுதான் தர்ம நியாயம் என்றும 11-11-72 தினபதி அத்தாணி மண்டபத்தில் அரசகேசரி என்னும் பெயருக்குள் மறைந்து நின்று கொண்டு எஸ். டி. சிவநாயகம் விழுந்தும் மீசையில் மண்படவில்லையென்று புலம்பியிருக்கிறார். தமிழரசுக் கட்சியைத் திட்டி எழுதியதால், தமது பத்திரிகை விற்பனை வீழ்ச்சியடைந்ததை மூடி மறைத்து சப்பைக்கட்டு கட்டுகிறார் தினபதி சிவநாயகம்.

நாம் சிவநாயகத்தை கேட்கிறோம் —

நீர் எழுதியிருப்பது உண்மையாக இருந்தால் அந்தரங்க சுத்தியானதாக இருந்தால்—காங்கேசன்துறைத் தொகுதிக்கு நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் தந்தை செல்வாவை ஆதரித்தும் அரசாங்கக் கட்சி வேட்பாளரை எதிர்த்தும் உமது தினபதியில் பிரசாரம் செய்வீரா?

அவ்வளவு நாணயமும் துணிச்சலும் உமக்கு உண்டா? அது இல்லாவிட்டால் பின் யாரிடம் துயா[illegible] கதையளக்கிறீர்?

— எஸ். ஆர். எஸ்.

## தமிழுணர்ச்சிக் கடிதஉறை உங்களுக்கு வேண்டுமா?

### ஈழவேந்தனுடன் தொடர்புகொள்க!

எல்லாம் தமிழ் இயக்கத்திற்கு புத்துயிர் அளிக்கும் நோக்குடனும் ஈழத் தமிழகத்தின் எல்லைப் பரப்பாய் விளங்கும் வடகிழக்கின் வரலாற்று சமய முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்குடனும் எம் தமிழ் ஈழத்தில் பொதிந்திருக்கும் பொருளியல்வளத்தை எடுத்து உணர்த்தும் நோக்குடனும்.

“எல்லாம் தமிழிற் செய்தே எம் வாழ்வாம் தமிழைக் காப்போம் வாரீர்”

“வாழ்விடத்தைக் காத்து வண்டமிழை வாழ் வித்த வன்னியசிங்கத்தை வாழ்த்து.”

“வண்டமிழர் தலைநகரும் பல்கலைகள் பயில் இடமும் உண்டெமக்கு திருமலையிற் காண்.”

“வடக்கும் கிழக்கும் உனக்கு வாழ்வினை அளிக்கும் உழவும் தொழிலும் உன் உயர்வினை உணர்த்தும்.”

“நல்லை நகர் நாவலர் பிறந்திலரேற் சொல் லு தமிழ் எங்கே?”

வீறுபுகழ் முத்தமிழ் வித்தகன் விபுலானந்தனை விருப்போடு வாழ்த்து மனமே.”

“தமிழினைத் தமிழன் போற்றின் தாரணி தமிழனைப் போற்றும்.”

“கோணமலை காணாத கண் என்ன கண்ணே கும்பிட்டு நில்லாத கையென்ன கையே”.

தீவினை தீர்த்திடும் திருக்கேதீசுவரனை நாவினால் வாழ்த்தி நலமே பெற்றிடுக.”

போன்ற பல பொருள் பொதிந்த - உணர்ச்சி ஊட்டும் பாடல்கள் பொறிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான கடித உறைகளை திரு. ஈழவேந்தன் கூட்டங்களிலும் ஏனைய இடங்களிலும் வழங்கிவருகிறார். ஒரு கடித உறையை 3சதமாகவும் 50 கடித உறைகள் கொண்ட கட்டை ரூபா 1/50 சதமாகவும் 1000 கடித உறைகள் கொண்ட பெட்டியை ரூபாய் 25/ஆகவும் விற்று வருகிறார். அஞ்சல் வாயிலாகப் பெற விரும்புவோர் 1000 கடித உறைகள் கொண்டபெட்டியை ரூபாய் 30/க்குப் பெறலாம் என்று அறிகிறோம். தொடர்பு கொள்ளவிரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

மா. கனகேந்திரன்,
(ஈழவேந்தன்)
150, சுபத்திரா வீதி,
நுகேகொடை.

## இலங்கைத் தமிழர்களுக்கு நீதி...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவேண்டிய கல்வி வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன.

‘மே 22, 1972ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் சட்டம் தமிழர்களின் எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்டு விட்டன. இந்த அரசியல் சட்டத்தை எதிர்த்துத்தான் தமிழர்கள் இன்று போராடுகிறார்கள்.

### இந்தியாவின் நிலை

‘இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் இந்தியாவின் நிலையென்ன? இதற்கு இலங்கையில் நடைபெற்றுவரும் சில நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

‘இன்றையஇலங்கை அரசு சீனாவுக்கு சார்பாக சாய்ந்து வருகிறது. பீக்கிங்கிலிருந்து 55கோடி ரூபா இலங்கைக்கு கடனாக கிடைத்திருக்கிறது. தொழில் நுட்ப நிபுணர்கள் என்ற போர்வையில் இலங்கையில் சீன ஏஜண்டுகள் நடமாடுகிறார்கள். இலங்கைக்கு சொந்தமான கடல் எல்லைக்குள் சுற்றிவருவதாகக் கூறிக்கொண்டு, இந்த சீன ஏஜண்டுகள் இந்திய எல்லைக்குள்ளும் திரும்பத் திரும்ப அத்துமீறி பிரவேசிக்கிறார்கள். இந்திய மீன் பிடியாளர்கள் அண்மையில் ராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டது சீன ஏஜண்டுகளின் ஆத்திர மூட்டும் நடவடிக்கையே;

### சீன அபாயம்

பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தின் போது பாகிஸ்தான் பண்டாரநாயகா சர்வதேச விமான நிலையம் மூலமாக படைவீரர்களை கொண்டு சென்றிருக்கிறது. இலங்கையின் இந்த நட்பு விரோத நடவடிக்கையை இலங்கை பாராளுமன்றத்தில் தமிழ் எம். பீக்கள் எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

‘இந்தியாவுக்கு எதிராக தாக்குவதற்கு இலங்கையை ஒரு தளமாகப் பயன்படுத்த சீனர்கள் முயற்சிக்கிறார்கள். சீனாவின் இந்த தீய நோக்கத்துக்கு இலங்கையும் உதவியாக இருக்கிறது.

‘பங்களாதேஷ் மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டதற்கு எதிராக, கல்கத்தா மக்கள் முதலில் குரல் கொடுத்ததுபோல இலங்கைத் தமிழர்கள் கொடுமைப் படுத்தப்படுவதற்கு எதிராக தமிழ் நாட்டு மக்கள் இன்று குரல் கொடுத்திருக்கிறார்கள். அங்கோலா கொடுமையையும், வியட்நாம் பிரேவசத்தனத்தையும், உகண்டா அநீதியையும் எதிர்க்கும் நாம் நமது தெற்கு எல்லையில் உருவாகும் அபாயத்துக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

‘இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை உணர்ந்து, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்திவைத்தும், ஐ. நா. சபையில் பிரச்சினையை எழுப்பியும், நட்பு நாடுகளின் மூலமும், இலங்கைத் தமிழர்களுக்கு இந்த அபாயகரமான கட்டத்தில் உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.’’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாடுபிடிப்பதற்குக் கொடி வேண்டுமாம்"

## ஆயிரம் ஆண்டு கால அடிமை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றுவித்தேன். என் அனுபவத்திலிருந்து வெடித்து வந்த கழகம் இது.

இந்த இருபத்தைந்து ஆண்டுகளிலே நாம் பட்ட பாடு கொஞ்சமல்ல. எனக்கு சுய சாதிப்பற்றுமில்லை, பிற சாதிப்பகையும் இல்லை. இந்த இரண்டுமில்லாமலே இருபத்தைந்தாண்டு காலம் நானும் வாழ்ந்து விட்டேன். இந்தக் கழகமும் வாழ்ந்து விட்டது.

### புதிய தமிழகம்

இந்த அரசு போய் விட்டால் என்ன ஆகும் என்றால், பழைய கதம்ப சென்னை மாகாணம் வரும்.

1956-ல் தட்சிணப் பிரதேச திட்டத்தை பெற்ற தாய் ராஜாஜி. அதற்கு பாலூட்டியவர் காமராஜர். இவ்வளவு பேரையும் வென்று மத்திய — மாநில ஆட்சிகளை வென்று திராவிட முன்னேற்றக்கழகமும், தமிழரசுக் கழகமும் கைகோர்த்ததன் விளைவு தான் 56-ல் பூத்த புதிய தமிழகம்.

ஆகவேதான் இந்த தமிழகம் காக்கப்படவேண்டும். மாறுவல் இன்றுள்ள அரசு நிலைக்கப்படவேண்டும். திரும்பவும் தொடர்ந்து வரப்படவேண்டும்.

### வாழையடிவாழை

இது இல்லையானால், வருகிற விபத்து—ஏன் தமிழுணர்வு கொல்லப்பட்டால் ஒழிய ஒருவேளை அண்ணா போனால் கலைஞர், கலைஞர் போனால் இன்னொருவர் இப்படி வாழையடி வாழையாக தமிழுணர்ச்சி படைத்த கூட்டம் வரும் என்ற அச்சத்தால் இந்த தமிழ் மாநிலம் அழிக்கப்பட்டு விடும்.

அதற்கு நீங்கள் தயாரானால் எதையும் செய்யுங்கள்.

### எங்கும் தமிழன்

இந்த தமிழ் மாநிலம் அமைவதற்கு முன்பு தலைமை நீதிபதி தமிழனல்ல. தலைமை செயலாளர் தமிழனல்ல. துறைதோறும் தலைவர்கள் தமிழர்களல்லர்.

ஆனால் தமிழகம் அமைந்த பிறகு நிலையெல்லாம் மாறி — பெருமளவுக்கு மாறும் என்ற நம்பிக்கையோடு நாம் இருக்க காரணமே இந்த மொழி வழி மாநிலம்தான்.

### ஆதரவு ஏன்?

காமராஜரை விட்டு — காங்கிரசை விட்டு நான் அவர்களை ஆதரிக்கிறேன் என்றால் அதற்கு தமிழன் என்ற ஒரே உணர்ச்சிதான் காரணம்.

மந்திரி பதவியை பார்த்து நான் ஏமாந்து உட்கார்ந்து இருப்பதுபோல ஒருபத்திரிகை காட்டுடன் போடுகிறது. இப்போது நடக்கிற சண்டையெல்லாம் பதவி வேண்டாம் என்பதற்காகத் தானா?

### பதவி

மதுவிலக்கு பிரச்சினையில் நான் சிறிது மாறுபட்டவன் என்றாலும் எங்கள் உறவு உறுதியானது என்று நான் பேசியதை — மந்திரிகளை என்னை நம்ப மாட்டேன் என்கிறீர்களே என்று பேசியதாக மற்றொரு பத்திரிகை போடுகிறது.

மந்திரி பதவிதான் என் குறிக்கோள் என்றால், அதை எப்போதோ அடைந்து இந்நேரம் சலித்து போயிருப்பேன்.

என்னிடம் அதற்காக கேட்கப்பட்ட போதும், பதவி இல்லாததால் தான் நான் பலசாலியாக நிற்பவன் என்னை விட்டு விடுங்கள் என்று உறுதியாக சொன்னவன் நான்.

நான் கட்சி சண்டைகளுக்குபோகவிருப்பவில்லை. கட்சிக்குள்ளே ஏற்பட்ட கோஷ்டி சண்டைக்கு போக விரும்பவில்லை. அதை அவர் பார்த்துக் கொள்வார்.

தேவைப்படாத இடத்தில் உதவிக்கு போவதும் மரியாதை இல்லை.

நாம் மாநில சுயாட்சி கோரிக்கொண்டிருக்கிறோம். மாநில சுயாட்சியில் நம்பிக்கை உடைய யாரும் மத்திய அரசுக்கு மனு போடுவது மானமுடைய செயல் அல்ல.

காக்கையும் குயிலும் நிறத்தில் ஒன்று போல இருந்தாலும், வசந்த காலம் வந்தால் எது காக்கை—எது குயில் என்பது தெரிந்து விடும். இது வசந்த காலம். இதுவரை நான் மாநில சுயாட்சி கேட்டவர்கள் கூட இப்போது மாறுகிறார்கள் என்றால் என்ன பொருள். பருவம் வருகிறபோதுதான் உருவம் தெரியும்."

இந்த மாநில அரசு தப்பு செய்கிறது என்றால் நான் நேரடியாகவே போராடுவேன்.

மூச்சு விட்டால் மத்திய அரசுக்கு மனு போடுகிறார்கள். எங்கும் இப்படி இல்லை. ஆனால் இந்த மாநிலத்தில் தான் மத்திய ஆட்சிக்கு மாறுபட்ட ஆட்சி. இந்த கட்சி வேற்றுமை காரணமாக மத்திய அரசு தலையிடும் என்று கருதுகிறார்கள். மத்திய அரசு தலையிட்டு இந்த ஆட்சியை நீக்கும் என்று நம்புகிறார்கள்.

இந்த மாநிலத்தில் ஒரு கட்சியும் மற்ற மாநிலங்களில் ஒரு கட்சியும் ஆள்கிற தென்றால் வழக்கமாக ஆக வேண்டும் — வரலாறாக ஆக வேண்டும். இதை எதிர்த்து அங்கே மனு போட்டால் மத்திய அரசு தலையிட்டு கலைத்து விடும் என்று நினைப்பதே அரசியல் சட்டத்திற்கு ஏற்பட்ட அவமானமாகும்.

இதை அனுமதிப்பது தி.மு.க. ஆட்சி என்பதால் கூட அல்ல — சிண்டிகேட் கட்சி ஆட்சியாக இருந்தால் கூட — எதிர்க்கட்சிக்காரர்கள் மனு போட்டால் ஆதரித்திருக்க மாட்டேன்.

## எம்.ஜி.ஆர்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சரோஜாதேவிக்கு ஜெமினி எடுத்துக்கூறியது என் காதில் விழுந்தது.

*

நடிகர் எஸ். ஏ. அசோகன், தந்தை செல்வா அவர்களையும் அவருடன் சென்றிருந்த எங்கள் எல்லோரையும் ஒரு நாள் விருந்துக்கு அழைத்திருந்தார். படங்களில் எல்லாம் வில்லன் — கொடுமைக்காரனாக வரும் அசோகன், மிகவும் அமைதியும் அடக்கமும் அறிவும் உள்ளவராக விளங்குவதைக் கண்டேன். மிகவும் அன்புடன் எம்மை உபசரித்த அசோகன், இலங்கைத் தமிழர்களைப்பற்றியும், ஈழத்து அரசியல் பிரச்சினைகளையும் மிகவும் நுணுக்கமாகக் கேட்டறிந்தார். பட்டதாரி அல்லவா அவர். அதனால் அவரிடம் விஷயங்களை புரிந்துகொள்ளும் ஆற்றலும், துருவி ஆராயும் [illegible] இருப்பதைக் கண்டேன்.

— வளரும்

## இப்படி ஏசியபடியே கொடிக்கு காறியுமிழ்ந்து, தீவைத்தார்!

### உதயசூரியன் கொடி எரிப்பு வழக்கில் இ. தொ. கா. லிகிதர் சாட்சியம்!

"எங்கள் காரியாலயத்துக்கு (இ. தொ. கா.) போகும் ஒழுங்கை ஊடாக அன்று (2-10-72) சப் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஸ வந்தார். வரும் பொழுது "யாரடா இந்தக் கொடியை ஏற்றியது? ஏற்றியவன் வெளியில் வாடா" என்று ஏசிய வண்ணம் வந்தார்.

"அந்த நேரத்தில் எங்கள் கட்டிடத்தில் தமிழர் கூட்டணிக் கொடியான உதய சூரியன் கொடி பறந்து கொண்டிருந்தது. அந்தக் கொடியைக் குறித்துத்தான் ராஜபக்சா ஏசிக்கொண்டிருந்தார். அவர் பேசிய மொழி சிங்களம். அது எனக்கு நன்றாக விளங்கும்.

"நாம் காரியாலய வளவுக்குள் புதியதொரு கட்டிடம் நிறுவிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கட்டிடத்திற்குள் இராஜபக்ச உள்ளே வந்ததும், நான் காரியாலயக் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தேன்.

அந்த நேரத்தில் ராஜபக்ச 'யாரடா இந்தக் கொடியைக் கட்டியது?" என்று கேட்டுக்கொண்டு கொடி கட்டப்பட்டிருந்த கம்பத்தை அறுத்து அந்தக் கம்பத்தை நிலத்தில் வீழ்த்தினார். பின்னர் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த கொடியை பிடுங்கினார். கொடியுடன் பிரதான வீதிக்கு வந்தார். பிரதான வீதி என்பது கடைவீதியாகும்.

"அவ்விடத்தில் நின்று கொடியைக் கழற்றி அக்கொடியின் மீது காறி உமிழ்ந்து "நாடு பிடிப்பதற்கு கொடி வேண்டுமாம்" என்று ஏசிக் கொண்டு அக்கொடியை கையில் எடுத்து அக்கொடிக்கு தீ வைத்தார். அதன் பின்னர் எரிந்த நிலையில் கொடியை நிலத்தில் போட்டு கொடி பறக்க விடப்பட்டிருந்த கம்பத்தை முறித்து எரிந்துகொண்டிருக்கும் கொடியின் மீது போட்டார். இந்தக் கொடி நைலான் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தது. அந்தக் கயிறும் நெருப்பில் போடப்பட்டது.

அந்த நேரத்தில் இச்சம்பவத்தை என்னுடன் 20, 25 பேர் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களில் அனேகமானோர் தமிழர்."

இவ்வாறு உதயசூரியன் கொடியை எரித்து ரூபா 35 நட்டமேற்படுத்தியதாக வவுனியா பொலிசைச் சேர்ந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ராஜபக்சவுக்கு எதிராக வவுனியா இ. தொ. கா. பிரதிநிதியால் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளித்த வவுனியா மாவட்ட இ. தொ. கா. கிளை லிகிதர் திரு. இரா. கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கில் வழக்காளியின் [illegible] வழக்குரைஞர் திரு. [illegible] இராசதுரையுடன் திரு. மு. ஆலாலசுந்தரமும் திரு. வின்சென்ட் பாலசிங்கமும் ஆஜராகினர்.

வழக்குரைஞர் திரு. எஸ். இராசதுரையின் கோரிக்கைப்படி நீதவான் திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு ஊடாக சப் இன்ஸ்பெக்டர் ராஜபக்சவுக்கு பிடிவிறுந்து அனுப்பும்படி உத்தரவிட்டார்.

## நாட்டைப்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறுகிறீர்கள். சுதந்திரக் கட்சியை ஆதரிக்கும் அமைச்சரும் இருக்கிறார். அப்போது ஏன் தேர்தலுக்கு ஒருவரை நிறுத்தி பலப் பரீட்சை பார்க்கலாமே, நீங்கள் அதிலிருந்து மக்கள் எதை ஆதரிக்கிறார்கள் என்பதை அறிய இது வாய்ப்பளிக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ மற்றெந்தக் கட்சிக்கோ முழுபெலமுமிருந்தால் ஏன் சவாலை ஏற்கக் கூடாது. ஏன் வடக்கில் தேர்தலை நடத்த அஞ்சுகிறீர்கள். நியமன திகதி பின்போடப்பட்டு பயமடைகிறீர்கள். செய்தி சரியாக இருக்கக்கூடாதென்பதே எனது ஆசை.

அரசாங்க வெற்றிடங்களுக்கு வர்த்தமானியில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் விளம்பரம் வந்தன. ஆனால் இன்று அப்படியில்லை. தமிழில் வெளிவருவதே இல்லை. தமிழர்களுக்குவேலை கொடுக்க விரும்பாவிட்டாலோ, விண்ணப்பிக்கக் கூடாதென்று விரும்பினாலோ அதை நீங்கள் வர்த்தமானி மூலம் தெரிவித்துவிடலாம்.

நாம் இந்த நாட்டில்தான் வாழவேண்டும். வேறு நாட்டில் எமக்கு அக்கறை கிடையாது மாழ்வதானாலும் இங்குதான் மாழ்வோம். ஆனால் எம்மை மதித்து, உரிமைகளைத் தராவிட்டால் வருத்தத்துக்குரிய விளைவுகளைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கும். அதையும் நாம் இங்கு கூறவேண்டியிருக்கிறது. அதுதான் நாட்டைப் பிரிக்கும் கோரிக்கை. என்ன நடந்தாலும் நாட்டைப் பிரித்தேதான் தீரவேண்டியிருக்கும்.

---

## சீன ஆயுதம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டால் மந்திரிமார் பென்ஸ் கார்களில் சவாரி செல்ல முடியாமல் போய் இருக்கும். இவ்விதம் நாட்டுக்கு சேவை செய்யும் தமிழர்களை அரசாங்கம் புறக்கணிப்பது குறித்து நாம் அதிக மனவேதனை அடைகிறோம்.

அரசாங்கம் தமிழர்களுக்கு ஆட்சியை ஒப்படைத்தால் நாம் பத்து வருட காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து விடுவோம். அப்படி நாட்டை ஒப்படைக்க பயந்தால் எமது பிரதேசத்தையாவது எங்களிடம் ஒப்படையுங்கள் நாம் நாட்டை [illegible] அபிவிருத்தி செய்து காட்டுகிறோம்.

## தமிழ்விழா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல இந்த ஆண்டும் மேற்படி இலக்கிய மன்றத்தினர் தமது ஆறுவது ஆண்டு விழாவுக்கு வழமை போல 'தமிழ்விழா' என்றே பெயரிட்டு, துண்டுப் பிரசுரங்களும், அழைப்பிதழ்களும் அச்சிடுவித்திருந்தனர்.

ஆனால் கடைசி நேரத்தில் சூரியபகவானின் தலையீட்டால அமைச்சு அதிகாரிகள் குறுக்கிட்டு, 'தமிழ் விழா' என்ற பெயரில் ஆண்டுவிழாவை நடத்தக் கூடாதென்றும், வேறுபெயரில் அதை மாற்றும்படியும் உத்தரவிட்டனராம். அத்துடன் அரசுக்கு எதிரான கருத்துடையவர்களை பேச்சாளர்களாக அழைக்கக் கூடாதென்றும் கட்டளையிடப்பட்டதாம்.

இதைத் தொடர்ந்து வேதனையும் வெறுப்பும் அடைந்த நிலையில், தமிழ் இலக்கியமன்றநிர்வாகிகள், 'தமிழ் விழா' என்று அச்சிடுவித்த அழைப்பிதழ்களையும், விளம்பர தாள்களையும் நீக்கிவிட்டு, புதிதாக 'ஆண்டு விழா' என்று குறிப்பிட்டு அச்சிடுவித்தார்கள் என்று அறியப்படுகிறது.

இதேபோல்கல்வியமைச்சு நடத்தும் தமிழ்த்தின விழாக்களும் இனி கைவிடப்படலாம் அல்லது பெயர் மாற்றம் செய்யப்படலாம்" என்று தெரியவருகிறது.

'தமிழ் விழா' என்ற பெயரைப் பயன்படுத்தவே தடைபோடும் அரசு இன்னும் சிறிதுகாலத்தில் தமிழைப் பேசாதே என்றுகூடச் சொல்லலாம்என்று வெறுப்படைந்த இலக்கியமன்ற உறுப்பினர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.


பொன்மொழி

"ஒருவன் பிறரை ஏமாற்றாமல் வாழ்ந்தால் தெய்வத்தன்மை அடைகிறான்."

—ஞானி.

மில்க் வைற் நீலசோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வருகின்றது. மேலுறைகளை சேகரித்து கொடுத்து திருக்குறள் புத்தகத்தை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நாட்டைப் பிரிப்பதே நமக்குள்ள ஒரேவழி”



## தேசிய அரசப் பேரவையில் மூதூர் தங்கத்துரை பேச்சு!

'நாம் இந்நாட்டில்தான் வாழவேண்டியவர்கள், வேறு நாட்டில் எமக்கு அக்கறை கிடையாது. மாழ்வதனாலும் இங்குதான் மாழ்வோம். எம்மை மதித்து எமது உரிமைகளை ஒப்புக்கொள்ளாவிட்டால் இந்நாட்டின் சரித்திரமே மாறும்—வருத்தத்துக்குரிய விளைவுகள் நிச்சயம் ஏற்படும். அதையும் நாம் இங்கு கூறிவிட வேண்டியதுதான். அதுதான் நாட்டைப் பிரிக்கும் கோரிக்கை என்ன நடந்தாலும் நாட்டைப் பிரித்தே தீர வேண்டிய தவிர்க்க முடியாத நிலைக்கு நாம் தள்ளப்பட்டு விடுவோம்'

—இவ்வாறு வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது தேசிய பேரவையில் பேசிய மூதூர் பா. உ. திரு. அ. தங்கத்துரை அரசுக்கு எச்சரித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

'நிதி அமைச்சரின் வரவு செலவுத்திட்டத்தால் வறிய மக்களுக்குச் சுபீட்சம் ஏற்படும் என்று எண்ணிய ஆயிரக்கணக்கான இளைஞர்களில் நானும் ஒருவன். ஆனால் கிடைத்ததோ ஏமாற்றம்.

'நிலை உணர்ந்து செயல்படுவதே பொறுப்புணர்ந்த நிதி அமைச்சருக்கு அழகு. அவரின் எண்ணப்படி இந்த வரவு—செலவுத் திட்டத்தைத் தயாரித்திருந்தால், பின்வரிசை உறுப்பினர்களுக்கும் பயப்படாமல் வரவு—செலவுத்திட்டத்தைத் தயாரித்திருந்தால் இன்று எதிர்கட்சி உறுப்பினர்கள் இவ்வாறு பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

நாட்டின் ஆக்கபூர்வமான அபிவிருத்தி வேலைகளுக்கு இவ்வளவு காலமும் 15 வீதமான தொகையே ஒதுக்கப்பட்டு வருகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 30 விதம் இந்த அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்படுகிறது. ஆனால் நமது நாட்டில் இப்படியான நிலை இல்லை.

'சென்ற ஐந்து, ஆறு வருடங்களாக நாட்டின் அபிவிருத்திக்கு 18 வீதமான தொகையே செலவழிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் எப்படி நாடு முன்னேற முடியும்? இந்த நிதி ஆண்டில் 168 கோடி ரூபா அபிவிருத்திவேலைக்குச் செலவழிக்கப் போவதாக நிதி அமைச்சர் கூறினார். இதை அவர் எப்படிப் பெற போகிறார் என்பது எவருக்குமே விளங்காத புதிராகும்.

இதே நிலையில் நாம் போய்க்கொண்டிருந்தால் இனிமேல் எமது அபிவிருத்தி வேலைகளுக்கு பணம் கிடைக்காமல் போய்விடும். சாதாரண நிரவாகிகூட வருவாய்க்கு ஏற்ற வகையில் செலவு செய்யத் தவறுவதில்லை. ஆனால் எமது நிதி அமைச்சரோ அப்படிச் செய்யத் தவறிவிட்டார்.

### பெரும்பான்மையினர் மனப்போக்கு

'இந்த நாட்டில் வாழுகின்ற பெரும்பான்மை மக்கள் இந்த நாடு அவர்களுடையது என்று கருதுகிறார்கள். சிறுபான்மையரான தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்று அவர்கள் எண்ணுகின்றனர். 'இந்த நிலையில் சிறுபான்மை மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன எங்கு சென்றாலும் தமிழர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்.

'புதிய அரசியல் சட்டத்தின் மூலம் மொழி உரிமை மத உரிமை, அடிப்படை உரிமைகள், ஆகிய முழுவதுமே மறுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் சிறுபான்மை மக்கள் நாட்டின் அபிவிருத்திக்கு எப்படி ஒத்துழைப்பு நல்குவார்கள், சிறுபான்மை மக்களுக்கு நீதி வழங்கப்பட்டால் ஒழிய நாடு சுபீட்சம் அடையமாட்டாது.

1956 ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்கள் இந் நாட்டிலுள்ள அந்நியர்கள் என்று கருதப்படுகிறார்கள். மொழி விஷயத்தில் மட்டுமல்ல இதர துறைகளிலும் சிறுபான்மை மக்கள் ஒதுக்கப்படுகிறார்கள் இவர்களுடைய இன்னல்களை ஒழித்து வாழ்வளித்தால்தான் நாடு சுபீட்சமடையும், நாட்டுப் பற்றும், விழிப்புணர்ச்சியுமிருந்தால்தான் நாடு முன்னேறும். இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும் வாழ வேண்டும் என்று நினைத்து சிறுபான்மை மக்களுக்கு உரிமைகளை வழங்கவேண்டும். தமிழ் மக்களும் சரி, முஸ்லிம் மக்களும் சரி ஒதுக்கப்பட்டே வருவதை இன்று காண்கிறோம்.

சிறுபான்மை மக்கள் இன்று கூட்டணி அமைத்திருக்கிறார்கள். உரிமைகள் மறுக்கப்பட்டால் நாட்டின் சுபீட்சத்தில் ஏன் நாம் பங்கு கொள்ளவேண்டும்.

இனிமேலும் தொடர்ந்து ஏமாறத் தயாராகவில்லை.

அதனால்தான் மலையக மக்களும், மற்ற தமிழ் மக்களும் ஒன்றுபட்டிருக்கிறார்கள். இந்த ஒற்றுமையை இனி அசைக்க முடியாது.

நாட்டின் வருமானத்தில் 80 சத வீதத வருவாயையும் பெற்றுத்தருபவர்கள் மலையகத்தொழிலாளர்கள்தான். ஆனால் இவர்களும் ஒதுக்கப்பட்ட தொழிலாளர் சமுதாயமாகவே இருக்கிறார்கள். குடிசை வீடு, கல்வி வசதியின்மை, போதியளவு சம்பளம் வழங்காமை போன்றவைகளின் மத்தியில் தோட்டத்தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். இப்படி ஒரு பகுதி தொழிலாளர்களுக்கு வேறுபாடு காட்டப்படுவது நியாயமானதாகத்தோன்றுகிறதா?

### வேலை வாய்ப்புகளில் வேறுபாடு

வேலை வாய்ப்புகளிலும் வேறுபாடிருந்து வருகிறது. இன்று எந்த வேலை பெற வேண்டியிருந்தாலும் அரசாங்க கட்சி எம். பி.க்களிடம் சிபார்சுக் கடிதங்களைப் பெற்றாகவேண்டும். இதனால் மற்றவர்கள் ஒதுக்கப்படுகின்றனர்.

இந்த நிலையை தபால் அமைச்சர் அறியாதவராக இருக்கிறார். அன்று உடுவில் அங்கத்தவர் பேசியபோது குறுக்கிட்ட தபால் அமைச்சர் "வேலை வழங்குவதில் பாரபட்சமில்லை" என்று கூறினார். அது அவரின் அறியாமை போலும். அவர் சார்ந்திருக்கும் கட்சியை ஆதரிக்கவேண்டும் என்ற காரணத்துக்காக ஆதரித்துப்பேசுகிறார்.

தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு இப்போது இல்லை.

திரு. ஏ. ஜி. பெர்னாண்டோ:— (தமிழில்)—முந்திய 1965-70 தமிழர்களுக்குத்தான் — பெடரல் கட்சிக்காரர்களுக்குத்தான் வேலை கிடைத்தது.

திரு. தங்கத்துரை—அந்த நேரத்திலும் சரி இன்றும் சரி உரிமைதான் பெரியதே யொழிய வேலைகள் அல்ல. அடிப்படை உரிமைகள்தான் தேவை. அதற்காகத்தான் நாம் சேர்ந்தோம். வேலைகள் பெறுவதற்கல்ல.

திரு. விஜயரத்தின பண்டா—(தமிழில்) எத்தனை உரிமைகளைப்பெற்றீர்கள்?

திரு. தங்க — உரிமை கிடைக்காததால்தான் வெளியேறினோம். எவருடனும் நாம் இப்படித்தான நடப்போம்.

எனது தொகுதியிலிருந்து மூவர் ஆசிரியர் பதவிக்கு அமர்த்த அழைக்கப்பட்டனர். அது பற்றிய கடிதமும் வந்தது. ஆனால் இறுதியில் என்ன நடந்ததோ தெரியாது அவர்களுக்கு நியமனம் கிடைக்கவில்லை. ஞானசௌந்தரி கிருஷ்ணபிள்ளை, இராஜேஸ்வரி இராஜையா, பாலசிங்கம் செல்லையா ஆகிய மூவருமே இவர்கள.

இவர்களின் முகத்தை மூதூர் முதலாவது அங்கத்தவர் விரும்பாததனால் தானோ என்னவோ இப்படி நடந்தது. அல்லது வேறு காரணமும் இருக்கிறதோ தெரியாது.

இப்படித்தான் வேறுபாடு காண்பிக்கப்படுகிறது.

திரு. விஜயரத்தின பண்டா:-அது பற்றி ஆராய்வோம்.

திரு. தங்க: நன்றி. ஆனால் நீங்கள் கல்வியமைச்சராகவோ அல்லது உதவி அமைச்சராகவோகூட இல்லையே. இப்படி நல்லமைப்படைத்தவர்களை வரவேற்கிறோம்.

நாடு முன்னேற வேண்டுமென்ற நல்ல நோக்கமிருக்குமானால் அதற்கு பரஸ்பர ஒற்றுமைவேண்டும். இவர் தமிழரா, இவர் சிங்களவரா? என்ற பிரச்சினையிருக்கக்கூடாது. வேற்றுமை மனப்பான்மை இருந்தால நாடு முன்னேறாது. நாமும் முன்னேறமாட்டோம்.

### உபதேர்தலை ஏன் ஒத்திப்போடுகிறீர்கள்?

நாம் ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையவர்கள். அது நிலைத்திருக்கவேண்டும். நீங்கள் இன்று ஜனநாயகத்தை புறக்கணிப்பதாகத் தெரிகிறது. உதாரணமாக காங்கேசன்துறை தொகுதிக்கு 29ம் திகதி தாக்கல் செய்யப்படவிருந்த நியமனம் பின்போடப்பட்டிருப்பதைக் கூறலாம். எமது தலைவர் உரிமைகோரி— ஒரு உரிமைப் போராட்டமாகத்தான் தேர்தலுக்கு நிற்கிறார். உங்களுக்கும் அங்கு இளைகள் உள்ளன. ஆதரவாளர்கள் இருக்கிறார்கள

(7-ம் பக்கம் பார்க்க)

---

## 'இராணுவ பலத்தைக் கொண்டு கிளர்ச்சிகளை நசுக்க முடியாது!'

### அரசுக்கு துரைரத்தினம் புத்திமதி!

'மூப்பது கோடி ரூபாவை இராணுவத்துக்காக செலவழிப்பதற்கு அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. ஏன் நாட்டில் கிளர்ச்சிகள் ஏற்படுகின்றன என்பதை அரசு எண்ணிப்பார்த்து அதற்கான காரணங்களைக் கண்டு பிடித்து அவற்றுக்கு பரிகாரம் காண வேண்டுமே தவிர—இராணுவத்தைக் கொண்டு கிளர்ச்சிகளை ஒருபோதும் நசுக்கிவிட முடியாது.'

—இவ்வாறு வரவு செலவுத் திட்டத்தின் மீது தேசிய பேரவையில் பேசிய பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் குறிப்பிட்டார்.

அவரது பேச்சின் சுருக்கம் வருமாறு:—

இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் வாசித்த பொழுது அது நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்டம அல்ல என்பதனை உணர்ந்தேன். அவர் தானாக இருஷ்டித்திருந்தால் நல்ல வரவு செலவுத் திட்டமாக அமைந்திருக்கும்.

இந்த வரவு செலவுத் திட்டம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், சேமிப்பை ஊக்குவிக்க வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தால் வரவு செலவுத் திட்டத்தில் திணிக்கப்பட்டிருக்கும் இப்பளுவை செல்வந்தர்கள் மீது சுமத்தியிருக்க வேண்டும். செல்வந்தர்களை இவ்வரவு செலவுத் திட்டம் பாதிக்கவில்லை. நடுத்தர வகுப்பினரைத்தான் வரவு செலவுத் திட்டம் பாதித்துள்ளது. அரசாங்க ஊழியர்கள் [illegible]மையாகப் பாதிக்கப்[illegible]ளனர்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் மக்களுக்கும் நிர்வாகத்திற்கும் மிடையே தொடர்பு இருக்கவேண்டும்.



உற்பத்தியைப் பொறுத்த மட்டில் யாழ்ப்பாணம் முன்னணியில் உள்ளது. மிளகாய் இறக்குமதி செய்யப்படாததால் உற்பத்தி பாதிக்கப்படும். ஆதலினால் மிளகாயை இறக்குமதி செய்யாமல் உற்பத்தியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். உற்பத்தி முறையில் பிழை இல்லை. கொள்வனவு செய்து விநியோகிக்கும் முறையில்தான் பிழை உள்ளது.

'30 கோடி ரூபா இராணுவத்துக்குச் செலவழிக்கப்பட உள்ளது. ஏன் நாட்டில் கிளர்ச்சி ஏற்படுகிறது. மக்களை திருப்தியான முறையில் வாழ்வதற்கு அரசாங்கம் [illegible] கையாளதே.

'கிளர்ச்சி செய்பவர்களை இராணுவத்தைக் கொண்டு எதுவும் செய்துவிட முடியாது. கிளர்ச்சி செய்யும் இளைஞர்களை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும்.

'மக்களிடத்தில் இருந்து தற்போது நிர்வாகம் எட்டிப்போய்க்கொண்டிருக்கிறது. அரசாங்கம் சர்வாதிகாரமான போக்கில் ஆட்சியை நடத்தினால் உற்பத்தி பெருகப் போவதில்லை.

'ஏப்ரல் கிளர்ச்சியின் பின்னர் இந்தச் சபையின் உறுப்பினர்கள் பலர் கூட மக்களின் நெருங்கிய தொடர்பிலிருந்தும் துண்டிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் உற்பத்தி எவ்வாறுபெருகும்

'கிழக்கு மாகாணத்தில் தற்பொழுதைய வெள்ள நிலை மேலும் நீடிக்குமானால், 20 வீதம் நெல் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட உள்ளது. வன்னிப் பகுதியில் யானை, பன்றி, முயல்களின் தொல்லைகள் அதிகரித்து உள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதானால் இவைகள் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். குரங்குகள் கஷ்டத்தை கொடுக்கின்றன.

'கூட்டுறவு இயக்கம் இப்போது மக்கள் இயக்கமாக இல்லை: இது அரசாங்க இயக்கமாகவே இருக்கிறது. இந்த இயக்கங்களில் அரசாங்க ஆட்களே நியமிக்கப்பட்டு உள்ளார்கள். கூட்டுறவு இயக்கம் என்றால் என்ன என்று தெரியாதவர்களை, கையாட்களைக் கொண்டு போய் டைரக்டர்களாக நியமித்தால் எப்படி கூட்டுறவு இயக்கம் வளரும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(31)



# எம். ஜி. ஆர். எப்படிப்பட்டவர்?

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்



..க்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் இலங்கை மண்ணில் பிறந்தவர். அதனுலதானே என்னவோ இலங்கை மண் மீது அவருக்கு தனியானதொரு பற்றும் பாசமும் இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாக இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் மீதும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் மீதும் ஆழ்ந்த அக்கறையும் அனுதாபமும் கொண்டவர் எம். ஜி. ஆர்.

1965ம் ஆண்டு இலங்கைக்கு முதன் முதலாக எம். ஜி. ஆர். அவர்கள் வந்தபோது, ஈழத்தமிழினத்தின் இணையற்ற தலைவர் தந்தைசெல்வா அவர்களை, வீடு தேடிச் சென்று மரியாதைசெய்து, தந்தையின் கைகளுக்கு முத்தமிட்டு தனது பாசத்தைக்காட்டிய காட்சி இன்றும் என் நெஞ்சத்தில் பசுமையாக இருக்கிறது.

1971ம் ஆண்டு தமிழ் நாடு சட்டசபைத்தேர்தல் நேரத்தில் நான் தமிழகம் சென்றிருந்தபோது— சென்னை கோடம் பாக்கத்தில் கலைஞர் கருணாநிதியவர்களைச் சந்தித்த அதே மேடையில் புரட்சி நடிகர் அவர்களையும் சந்தித்தேன். அந்த மேடையில் கலைஞரும், புரட்சி நடிகரும் ஒருவருக்கொருவர் ஏதோ இரகசியம் சொல்லி வாய்விட்டுச் சிரித்து ஒரிதது மகிழ்ந்த அந்தக் காட்சியை நினைவில் கொண்டு வந்து பார்க்கும் போது — அந்த இருவரும் இன்றைய அரசியலில் எப்படி இரண்டு துருவங்களாக மாறினுர்கள் என்பது புரியாத புதிராகவே யிருக்கிறது.

புரட்சி நடிகர் அந்த மேடையில் வைத்து, இலங்கை அரசியல் நிலை பற்றி என்னிடம் கேட்டறிந்தார். தந்தை செல்வா அவர்களின் நலம்பற்றி விசாரித்தார். மட்டுநகர் முதல்வர் இராசதுரை அவர்களைப் பற்றியெல்லாம் மிகவும் அக்கறையுடன் கேட்டறிந்தார்.

''எப்போது இலங்கைக்கு திரும்புகிறீர்கள்? ஆறுதலாகப்பேசுவோம் — பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் ஒரு நாள் எனது வீட்டுக்கு வாருங்கள்' என்று எம். ஜி. ஆர். அவர்கள் சொன்னுர்கள். ஆனுல் தமிழக தேர்தலுக்கு முன்பேயே நான் அப்பொழுது ஈழம் திரும்பவேண்டியிருந்தது.

தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம் குழுவினருடன் மீண்டும் இந்த ஆண்டு (1972) தமிழகம் சென்றிருந்தபோது மக்கள் திலகத்தின் கோரிக்கைப்படி ராமாவரத்திலுள்ள அவரது இல்லத்துக்கு செல்லமுடிந்தது.

கறுப்பு சிவப்பு கரை போட்ட வேட்டி—அழகான சில்க் நாஷனல்— கறுப்புச் சிவப்புத்துண்டு — இப்படி அவருக்கேயுரிய எளிமையான உடையுடன், கெம்பீரம் பொருந்திய அந்தச் சிரித்த முகத்துடன் தனது வீட்டு வாசலில் காத்து நின்று சந்தனமாலை சூட்டி தந்தை செல்வாவை பாசத்துடன் வரவேற்ருர் எம். ஜி. ஆர்.

'ஜானகி, ஜானகி...' என்று உயர்ந்த குரலில் அழைத்த எம். ஜி. ஆரின் குரல் கேட்டு, அவரது துணைவியார் ஜானகி அம்மாளும் வெளியே வந்து எம்மை வரவேற்ருர்.

'காலையிலே ஒரு ஷூட்டிங்குக்கு போயிருந்தாங்க— கதாநாயகியை 'லிப்ட்' பண்ணும்போது நாரியில் நோவு ஏற்பட்டு, டாக்டரிடம் இப்போதுதான் காட்டிவிட்டு, உங்களை எதிர்பார்த்துக் காத்துக்கிட்டிருக்கிருங்க-' என்ருர் ஜானகி அம்மாள்.

'என்ன படம் அது அண்ணன்...?' என்றேன் எம். ஜி. ஆரிடம்.

'நான் ஏன் பிறந்தேன்?' என்றொரு படம்— என்ருர் எம். ஜி. ஆர். 'நீங்கள் ஆனந்த விகடனில் எழுதுகிறீர்களே அதா' என்று அமிர் அண்ணன் கேட்டபோது, 'அது வேறு — இது வேறு'-என்று எம். ஜி. ஆர். பதிலளித்தார்.

இதைத் தொடர்ந்து இலங்கை அரசியல் பற்றி பேச்சுத் திரும்பியது.

'ஆமா, நானே கேட்கவேணுமென்று இருந்தேன். நம்ம தமிழர்களுடைய இன்றைய நிலையென்ன...? என்று ஆரம்பித்தார் எம். ஜி. ஆர்.

அமிர்தலிங்கம் அவர்கள் தெளிவான அரசியல் விளக்கம் ஒன்றை எம். ஜி. ஆருக்கு அளித்தார்.



எம். ஜி. ஆருடன் நடைபெற்ற உரையாடலின் போது - அவர் தெரிவித்த கருத்துக்களும், காட்டிய ஆர்வமும், உணர்ச்சியும் எம்மைப் பிரமிக்க வைத்தன—இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு எத்தகைய உதவியையும்தரத் தாம் தயாராக இருப்பதாக எம். ஜி. ஆர். உறுதியுடன் தெரிவித்தார்.

உடையவரோ அதே அளவு கலைத்துறையிலும் ஈடுபாடுள்ளவர். மக்கள் திலகம் எம். ஜி. ஆரைச் சந்தித்ததுபோல்— தமிழ்நாட்டின் தவநடிகர் சிவாஜி கணேசனையும் சந்திக்கவேண்டும் என்று அவர் விரும்பினுர்.

சென்னை பிரசாத் ஸ்டுடியோவில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது. நாங்கள் சென்ற சமயம் சிவாஜி கணேசன் அவர்கள் 'தவப்புதல்வன்' என்ற படத்திற்காக 'மேக்கப்' செய்து கொண்டிருந்தார்.

தந்தை செல்வாவைக் கண்டதும், தனது 'மேக்கப்' நாற்காலியை விட்டெழுந்து வரவேற்ருர் சிவாஜி கணேசன்.

''உங்களைப்பற்றி நெறையக் கேள்விப்பட்டிருக்கிறேன் — உங்களைச் சந்தித்தது ரொம்ப மகிழ்ச்சி —'' என்ற சிவாஜி, 'ஐயாவுக்கு இப்போ எத்தனை வயசு?' என்ருர்.

''எனக்கு இப்போது எழுபத்திநான்கு'' என்று பதிலளித்த தந்தை அவர்கள், சிவாஜியைப் பார்த்து ''நீங்கள் இளமையுடன் இருக்கிறீர்கள்'' என்ருர்.

''ஓ யெஸ், எனக்கு நாற்பத்திநான்கு வயசு — மம்மிக்கு 73 வயசு — டடிக்கு 84 வயசு —'' என்று அடுக்கிக்கொண்டே போனுர் சிவாஜி.

'அப்போ நீங்களும் நீண்டகாலம் வாழுவீர்கள்' என்று தந்தை செல்வாகூற 'ஓ— யெஸ்' என்று சிரித்துக்கொண்டே சிவாஜி பதிலளிக்க, பிரசாத் ஸ்டுடியோவிலிருந்து புறப்பட்டோம்.

ஃ

தி. மு. கழகப் பிரமுகர் கோவை — ராஜமாணிக்கம் எம். எல். ஏ. அவர்கள் தாம் தயாரிக்கும் புதிய திரைப்படமொன்றின் படப்பிடிப்பை தந்தை செல்வாவைக் கொண்டு துவக்கி வைக்க வேண்டுமென்று விரும்பினுர். அவரது விருப்பப்படி விஜயா — வாகினி— ஸ்டுடியோவில் படப்பிடிப்பை தந்தை செல்வா ஆரம்பித்து வைத்தார்கள். ஜெமினி கணேசன் — சரோஜாதேவி ஆகியோர் நடிக்கும் காதல் காட்சியொன்று அன்று படமாக்கப்பட்டது.

ஜெமினி கணேசன் தந்தை செல்வாவுக்கு கைகூப்பி வணங்கித் தனது மரியாதையைத் தெரிவித்துக்கொண்டார்.

'இலங்கையில் மிகவும் மதிப்புவாய்ந்த பெரிய மனிதர் — பாராளுமன்ற உறுப்பினர். இலங்கைத் தமிழர்களின் தலைவர்'' — என்று

## கோவை மகேசன்

எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கிய சிற்றுண்டிவிருந்து முடிந்து காரில் திரும்பிக்கொண்டிருக்கையில் எம். ஜி. ஆரைப்பற்றி தந்தை செல்வா கூறியது இது— "M. G. R. is a man of reality" அதாவது 'எம். ஜி. ஆர். யதார்த்தரீதியான மனிதர்'' என்பதுதான்.

தி. மு. கழகத்திலிருந்து வெளியேறி இப்போது அவர் தனிக்கட்சி அமைத்துள்ள போதிலும், இலங்கைத் தமிழர்கள் மீது இதுநாள் வரை அவர் கொண்டுள்ள பாசமும் பற்றும் தொடர்ந்தும் அவரிடம் இருந்துவரும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

ஃ

தந்தை செல்வா அவர்கள், கர்நாடக சங்கீதத்தில் எத்துணை ஆரம் ஈடுபாடு

தந்தை செல்வாவைப்பற்றி

(9-ம் பக்கம் பார்க்க)

---

# சிங்கள ஆட்சியாளர்களுக்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வரை நீதிமன்றங்கள் தமிழ்மொழியில் பரிபூரணமாக நிருவாகம் நடத்தவில்லை.

புதிய அரசியல் சட்டம் நிறைவேறிய பின்னர் தமிழ் பகுதிகளில் தமிழ்மொழி நீதிமன்ற மொழியாக இருக்கும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

'எல்லா இடங்களிலும் தமிழுக்குப் புறக்கணிப்பு. நியமனங்களில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இது ஏன்? இந்த நாட்டில் தமிழ் மொழிக்கு எத்தகைய இடம் அளிக்கப்பட்டுள்ளது? நீதி அமைச்சர் தனது உரையில் தமிழ்மொழி பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை.

'இந்த அமைச்சரவையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதி எவராவது அமைச்சராக இருக்கிறுரா? இல்லை. 19 தமிழ் எம். பிக்கள் இருக்கிறுர்கள். அவர்களில் ஒருவராவது இந்த அமைச்சரவையில் இருக்கிறுரா?

'எனவே இந்த ஆட்சியில் எமக்குப் பங்கில்லை. பிரதமரால் நியமிக்கப்பட்ட யாரோ ஒருவரை, ஏதோ சில காரணங்களுக்காக அமைச்சராக்கி விட்டு இவர் தான் தமிழர்களின் பிரதிநிதி என்று சொன்னுல் அதைத் தமிழ் மக்கள் எப்படி ஏற்பது?

'நாம் இப்போது நல்லதொரு சந்தர்ப்பம் அவருக்குக் கொடுத்துள்ளோம். முடியுமானுல் அவரை நீங்கள் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் நிறுத்துங்கள். அவர் கட்டுக்காசைக் காப்பாற்றினுல் நான் எனது பதவியை ராஜிஞமாச் செய்கிறேன். அது போன்று கூட்டணி எம். பிக்கள் மற்றையோரும் தமது பதவிகளை ராஜிஞமாச் செய்வார்கள்.

இதை ஒரு சவாலாகவே இச்சபையில் விடுகிறேன். முடியுமானுல் செய்துபாருங்கள். உங்களுக்கு இப்படிச் செய்யும் துணிவு இருக்காது.

ஒரு குரல் — முஸ்லிம் அமைச்சர்களும் இல்லை.

பண்டிதர் இரத்தினம் — இங்குள்ள முஸ்லிம் மக்கள் அது பற்றிப் பிரச்சினை எழுப்பவேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு முஸ்லிமை அமைச்சராக்க வேண்டியது அவசியம்தான்'

தனி நாடு, தனிராஜ்யம் என்ற போராட்ட நிலையை நீங்கள் விரும்பவில்லை என்ருல் இந்தக் கடைசி நேரத்திலாவது தமிழர்களுடைய உரிமைகளை அரசியல் சட்ட மூலம் வழங்கி எமது பிரச்சினைகளைத் தீர்த்து வையுங்கள்.

''நாங்கள் ஆட்சியில் உரிமை கேட்டோம். தரமாட்டோம் என்கிறீர்கள். சரி, மொழி உரிமையையாவது தாருங்கள் என்று கேட்கிறோம். நீதிமன்ற மொழி தமிழாக இருப்பதற்குச் சட்டம்கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனுல் இன்னும் ஒன்றும் நடைபெறவில்லை. அதற்குப் பதிலாக தமிழ் மக்களை அவமானப் படுத்தி உள்ளீர்கள்.

''சுற்றறிக்கை மூலம் தமிழில் அலுவல்களை நடத்த நீதி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இது ... அவமானப்படுத்துவதாகும். வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் சிங்களத் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர்கள் ஒரு வேலையும் செய்யாமல் இருக்கிறுர்கள். இது தமிழ் நீதிமன்றங்களில் சிங்கள தட்டெழுத்து- சுருக்கெழுத்தாளர்களுக்கு வேலை வழங்குவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுதான்.

தமிழ்க்கடிதங்களுக்கு ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பதில் அனுப்புகிருர்கள், மொழிபெயர்ப்புகள் கூட ஆங்கிலத்தில்தான் வருகின்றது. தமிழில் வருவதே இல்லை, ஆயிரக்கணக்கான கடிதங்களுக்கு இப்படித்தான் பதில் அனுப்புகின்றனர். தபால் அமைச்சிலிருந்து இன்று வந்திருக்கும் கடிதம் ஒன்றை சபையில் சமர்ப்பிக்கிறேன். அக்கடிதம் சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இப்படித்தான் நீங்கள் கருமம் ஆற்றுகிறீர்கள். தமிழர் ஒருவருக்கு சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ பதில் எழுதுவதால் பயனில்லை. தமிழில் பதில் எழுதுங்கள்.

உள்நாட்டில் அமைதி நிலவாத பட்சத்தில் பொருளாதார ஸ்திரத்துக்கு வழி வகுக்க முடியாது. எல்லா மக்களையும் ஒன்ருகப்பேணி, சமவாய்ப்பு, சமதர்மக் கொள்கையை கடைப்பிடித்தால்தான் நாம் முன்னேறலாம். அல்லது நாம் எதிலும் பின்தங்கியவர்களாகவே இருப்போம்.

கிளர்ச்சிகளையும், தமிழர் போராட்டங்களையும் அடக்கத்தான் அரசாங்கம் திட்ட... சர்வாதிகார ஆட்சிக்குத்தான் வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2வது வெற்றி மாதம் வெள்ளி விழா சித்திரம்

செண்ட்ரல் (மருதானை) ராஜேஸ்வரா (மட்டுநகர்) ராணி (யாழ்ப்பாணம்)



- சிவாஜி கணேசன்
- ஜெயலலிதா
- மனோரமா
- எம். ஆர். ஆர். வாசு
- வீ. கே. ராமசாமி, சுபா நடித்த

# பட்டிக்காடா பட்டணமா

டைரக்ஷன்: பி. மாதவன் பாடல்கள்: கண்ணதாசன் இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

---

4வது வாரம்

காட்சியளிக்கிறது

கெபிட்டி (கொழும்பு) கிங்ஸ் (பதுளை)



# நூற்றாண்டு காலம் வாழ்க

7வது வெற்றி வாரம்

செல்லமகால்

சித்ராலயா

ஸ்ரீதரின்



---

இயக்குனர் திலகம் கே. எஸ். ஜியின் மற்றுமோர் சாதனை தமிழகத்தின் வெற்றிச்சித்திரம்

4வது வாரம் கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) லிடோ (யாழ்நகர்)



சிவாஜிகணேசன், பத்மினி, நம்பியார், ஜெய்சங்கர், வாணிஸ்ரீ, நாகேஷ், சகுந்தலா.

ஆஸம் ஆர்ட்ஸ்

—நடித்த—

# குலமா குணமா

தயாரிப்பு: எம். ஆஸாம்

பாடல்கள்: கண்ணதாசன்

திரைக்கதை-வசனம்-டைரக்ஷன்

K.S. கோபாலகிருஷ்ணன்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1972ம் வருடம் [illegible] 26ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org